ஓம் சாயி ராம்

# சாயி மார்க்கம்

இலங்கை ஸ்ரீ சத்ய சாயி நிலையங்களின்

காலாண்டு இதழ்

# சாயி மார்க்கம்
# SAI MARGAM (Tamil)


| மலர் 7<br>இதழ் 19 | ஒரே ஒரு மதம்<br>அது அன்பு எனும் மதம் | பகவானின் 75வது ஆண்டு<br>ஏப்பிரல் - யூன் 2000 |
|---|---|---|


## பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 01. | அன்று நீங்கள்........ இன்று நாங்கள்........... இனி | 01 |
| 02 | எமது மனம் நிறைய | 03 |
| 03. | ஆத்மீக மறுமலர்ச்சி | 04 |
| 04. | பகவான் காட்டும் பாதையில் பாலர்களை வளர்த்தல் | 06 |
| 05. | SANATHANA SARATHI இல் பகவான் | 08 |
| 06 | புகைக்கரி புத்தர் (THE SOOTY BUDDHA) | 11 |
| 07. | பிள்ளைகளுக்கான ஆங்கில அரிச்சுவடி அறிவுரை | 12 |
| 08. | சாயி அன்பர்களுக்கு பகவானின் அருளுரை | 13 |
| 09. | அன்புடன் எம்மைக் காப்பீர் | 14 |
| 10. | பிரார்த்தனையின் சக்தி | 16 |
| 11. | முன்மாதிரியாக நடவுங்கள் | 18 |
| 12. | உயர்நிலை மாற்றத்திற்கான தகவல் | 23 |
| 13. | சாந்திக்கு ஒரு சாயி | 25 |
| 14. | செய்திகள் | 27 |



| | |
|---|---|
| இலங்கையில் தனிப்பிரதி | ரூபா 25/- |
| வருட சந்தா (4பிரதிகள் தபால் செலவு உட்பட) | ரூபா 100/- |
| வெளிநாடு வருட சந்தா | US டொலர் 10 |

காசோலை பணக்கட்டளைகளை ஆசிரியருக்கு அனுப்பி வைக்கவும்.



ஆசிரியர்:
பேராசிரியர் செ. சிவஞானசுந்தரம் (நந்தி)

துணை ஆசிரியர்கள்:
ஸ்ரீ. S. R. சரவணபவன்
ஸ்ரீ. V. K. சபாரத்தினம்

திருவாக அலுவலகம்:
"சத்தியம்"
68 1/2, பருத்தித்துறை வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

ஓம் ஸ்ரீ சாயிராம்

# அன்று நீங்கள் ................ இன்று நாங்கள் ........... இனி.

நண்பா,

நல்ல ஞாபகம். மறப்பதற்கு என்ன ஒரு யுகமாக கழிந்து விட்டது? ஐந்து வருடங்கள்தானே; 1995 சரியா? அன்று அந்தியில் நீயும், உனது மனைவியும், நான்கு பிள்ளைகளும், உனது மாமியும் சாவகச்சேரியில் எங்கள் வீட்டிற்கு வந்த கோலம்! உனது குடும்பம் வரும் என நாங்கள் எதிர்பார்க்கவில்லை. ஆனால் ஏதோ ஒரு குடும்பம் அல்லது குடும்பங்கள் வரக்கூடும் என எண்ணினோம். அக்கம் பக்கம் வீடுகளில், யாழ்ப்பாணத்தில் இருந்து அகதிகளாக வந்த குடும்பங் களின் பேச்சும் அவல ஆரவாரமும் கேட்டன. 'உங்கள் வீட்டில் எத்தனை அகதிகள்?' என்று தெருவில் கேட்கும் பொழுது போக்கு தொடங்கி விட்டது.

யாராவது எங்கள் வீட்டிற்கு வரக்கூடும் என்று நாம் எண்ணியதால், அதற்கென ஒரு அறையை எனது மூத்தமகள் ஒழுங்கு செய்திருந்தாள். பெரிய அறை அல்ல. எங்கள் வீடே சிறிசுதானே. உண்மையில் அது ஒரு அடைப்பு, எனது தகப்பனார் அந்த இடத்தில்தான் சாகும்வரை படுப்பார்.

நீங்கள் வந்து, அரை மணி நேரம் கூட ஆகவில்லை, வேலிக்கு மேலால் ஒரு குரல் கேட்டது: 'என்ன உங்கள் வீட்டிற்கும் அகதிகள் வந்திட்டினம் போலை?' என்னுடைய கடைக்குட்டிதான் பதில் சொன்னான்: 'இல்லை ஒரு மாமாவும், மாமியும், பாட்டியும் மூன்று அக்காவும், ஒரு அண்ணாவும் வந்திருக்கினம், மாமா.'

அவனுக்கு 'அகதி' என்றசொல் தெரியாது. மூன்று வயதுப் பையன். படலையில் நின்ற எனது மூத்த மகளிடம் ஒருவர் விசாரித்தார்: "அகதிகள் வந்திருக்கினம் போலை" மகள் சொல்லுறதும் கேட்டது: 'அப்பாவின் நண்பர் குடும்பம் விருந்தினராக வந்திருக்கினம்.' ஓ. எல் படிக்கும் அவள் 'அகதி' என்ற சொல்லை விரும்பாதவள். அவள் நாங்கள் சாதாரணமாகச் சிந்திக்காத பல விடயங்களைப் பற்றிப் பேசுவாள். மற்றவர்களுக்கு உதவி செய்வதற்கு கிடைக்கும் சான்ஸ் நமக்குக்கடவுளால் தரப்பட்டது. அதை அன்புடன் செய்வது வெறும் மனித சேவை அல்ல, ஒரு தெய்வீக சாதனை என்று எல்லாம் கூறுவாள். அவளைப் பற்றி நான் அதிகம் எழுதவிரும்பவில்லை. ஆறு மாதங்கள் எங்களுடன் இருந்தீர் கள். நீங்கள் விடை பெற்று யாழ்ப்பாணம் திரும்பும்போது, உனது மகள்மார் எனது பிள்ளைகளைக் கட்டி அணைத்து முத்தம் இட்டார்கள். அவர்கள் சகோதரர் போல் ஆகிவிட்டார்கள்.

அன்று, நீங்கள் எங்கள் வீட்டிற்கு வந்தபோது, சைக்கிள் சகிதம் மூட்டை முடிச்சுகளுடன் வந்தீர்கள் நேற்று, நாங்கள் உடுத்த உடுப்புடனேயே உனது வீட்டிற்கு வந்தோம். இப்படியான நிலை எங்களுக்கு வரும் என்று நாங்கள் எதிர்பார்க்கவில்லை. பதுங்குகுழி இருந்தால் எந்த நிலைமையையும் தாக்காட்டலாம் என்று இருந்தோம். உண்மையில், எங்கள் வீடு நொருங்கி

தரையில் குவிந்தபோது நாங்கள் பதுங்கு குழியில்தான் இருந்தோம். அல்லாவிடில் கற்களுள் சமாதியாகி இருப்போம். தகுந்த நேரம் பார்த்து, வெளியே வந்து, ஓடிவந்தோம். விபரம் எல்லாம் நாங்கள் உங்களுக்குச் சொன்னோம்.

சொல்லாத விடயம் எங்கள் மனநிலை. நாங்கள் நடந்துவரும் போது மிகவும் நம்பிக்கையுடனேயே வந்தோம். ஒரு உறவினர் வீட்டிற்கு வருவதாகவே எண்ணியதால் ஏற்பட்ட மனநிம்மதி அது. பெரும் பசியுடன் வந்தோம். சாப்பிடும்போது, உனது மகள் ஒருத்தி சொன்னாள். 'இது உங்கள் வீடு ....' எங்கள் நம்பிக்கையின் அர்ததமாக அந்த வார்த்தைகள் எனது காதுகளில் ஒலித்தது.

நண்பா, எங்கள் குடும்பங்கள் இரண்டும் பெருமான் சாயியின் வழிகாட்டலில் வாழ எத்தனிப்பவர்கள். குடும்பமாக நாம் சாயி நிலைய அங்கத்தவராக சிலகாலம் இருந்து வருவது நாம் செய்த புண்ணியம். எங்கள் பிள்ளைகள் பாக்கியசாலிகள். மிகச் சிறுவயதிலிருந்தே பாலவிகாஸ் என்ற தெய்வீகக் கல்வி கற்கும் வாய்ப்புப் பெற்றவர்கள். எங்களிலும், அதாவது பெரியவர்களிலும் பார்க்க பல வேளைகளில் அவர்கள் தன்னலம் அற்றவர்களாகவும், உண்மை கடைப் பிடிப்பவர்கள் ஆகவும், மன்னிக்கும் மனம் உள்ளவர்களாகவும் இருப்பதை நீ அவதானித்திருப்பாய். சந்தோஷப் பட்டிருப்பாய்.

ஆனால், எமது நாட்டில் எல்லா குடும்பங்களும் இப்படியா? எல்லா பிள்ளைகளும் இப்படியா? சாயி பக்தர்கள் என்று தங்களைக் கூறிக்கொள்பவர்கள் கூட எல்லோரும் இப்படியா? எல்லோரும் திருந்த வேண்டிய காலம் வந்துவிட்டது. அடிப்படை மனிதாபிமானமாவது நமது சமூகத்தில் சுவறவேண்டிய காலம் வந்து விட்டது.

நமக்கு சமீப காலத்தில் ஏற்பட்ட அவலமான, அவமானமான, மனத்தைப் புண்படுத்திய அநுபவங்கள் படிப்பினையாக இருக்கட்டும். ஏழேழு சந்ததிக்கும் இந்த துன்பியல் நாடகம் இந்த நாட்டில் நடக்கப்படாது. இயற்கை நிகழ்வுகள் - பூமி நடுக்கம், வெள்ளம், புயல் - தற்செயலாக வரலாம்; ஆனால் சமூக நிகழ்வுகள், இப்படியான விபரீத கேடுகள் (DISASTERS) சமூகத்தின் நாட்பட்ட துரோக, குரோத, மோக, சுயநல, அகங்கார கரும வினைகளாலேயே ஏற்படுகின்றன. எமது மூதாதையர் தவறு செய்துவிட்டனர்; நாமும் செய்திருக்கலாம்.

இனியாவது, ஒரு சுகமுள்ள அன்புள்ள சமூகம் உருவாகட்டும். அத்தகைய சமூகம் வளர்வதற்கு சாயி அடியார்களாகிய நாம் உதவ வேண்டும். எப்படி? சாயியின் போதனைகளின்படி முழுமையாக வாழ்வதுதான் அதற்கு ஒரே வழி.............

முடிபடாத இந்தக் கடிதம் கற்பனையல்ல. தெய்வம் எழுதத் தூண்டிய ஒருவரின் மனச் சொற்கள்

- ஆசிரியர்.

## எமது மனம் நிறைய ............

19. You say " I WANT PEACE" Delete the 'I' and the 'WANT' you have "PEACE".
**"எனக்கு அமைதி வேண்டும்"** என்கிறீர்கள். **'எனக்கு'** என்ற அகங்காரத்தையும், **'வேண்டும்'** என்ற ஆசையையும் நீக்கி விடவும். அப்போது **'அமைதி'** இருக்கும்.

20. Be good, see good and do good. That is the way to God.
நல்லவனாய் இரு, நல்லதைப் பார், நல்லதைச் செய். கடவுளை அடைவதற்கு அதுவே வழி.

21. Money comes and goes; but morality comes and grows.
பணம் வரும் போகும்; ஆனால் நற்குணம் வரும் வளரும்.

22. ***STEPS DURING JOTI MEDITATION***
You are in the light.
The light is in you
You are the light
**ஜோதி தியானத்தின் படிகள்:**
நீ ஒளியில் இருக்கின்றாய்
ஒளி உன்னுள் இருக்கின்றது.
நீயே ஒளி.

23. Start Early, Drive Slowly, Reach Safely.
வேளைக்கு தொடங்கு, மெல்ல மாக ஓட்டு, பாதுகாப்பாக போய்ச் சேர்.

24. Love is GOD, God is Love. Where there is love, there God is certainly evident.
அன்பே கடவுள், கடவுளே அன்பு. அன்பு இருக்கும் இடத்தில், கடவுள் நிச்சயமாக காணப் படுவார்.

25. Human society minus God is equal to forest of brutes.
கடவுள் இல்லாத மனித சமூகம், மிருகங்கள் உள்ள காட்டுக்குச் சமம் ஆகும்.

26. ABC. Always Be Careful.
எப்போதும் கவனமாக இரு.

27. ABC. Avoid Bad Company.
கெட்டவர் சகவாசம் தவிர்.

28. Life is a Game. Play it.
வாழ்க்கை ஒரு விளையாட்டு. விளையாடவும்.

29. Seek your faults and others merits.
உன்னுடைய தவறுகளையும், மற்றவரின் நற்குணங்களையும் தேடு.

30. Truth, Goodness and Beauty are three qualities of the Divine.
தெய்வீகத்தின் மூன்று குணங்கள் - சத்தியம், சிவம், சுந்தரம்.

# ஆத்மீக மறுமலர்ச்சி

**("வெசக் புத்தபூர்ணிமா – 2000" என்ற ஆங்கில விசேட மலரில் வெளிவந்த கட்டுரையின் தமிழ் மொழிப்பெயர்ப்பு)**

வைகாசி – 2000ல் வைற்ரில்ட், பிருந்தாவனத்தில் நிகழ்கின்ற சாதனையை மனித ஆத்மீக வளர்ச்சியில் ஓர் மகத்தான நிகழ்வாகவே எதிர்கால வரலாற்றாசிரியர்கள் கருதுவர்.

இந்த நிகழ்ச்சியின் சிறப்பு வியத்தகுவொன்றாகும். தன்னைச் சூழ்ந்திருக்கும் உலகவிவகாரங்களைத் தாண்டி,பல நூற்றாண்டுகளாக நித்திய மான தத்துவங்களைப் பற்றி மனிதன் ஆராய்ந்து கொண்டே வந்திருக்கிறான். இன்று இந்த பிருந்தாவனத்திலே மனிதனின் விவேகத்தின் ஒப்பற்ற வெற்றியாகிய – பரிபூரண விடுதலைக்கு இட்டுச் செல்லும் - கிடைத்தற்கரிய பெரும் பேற்றைப்பற்றி சிந்திக்கிறோம், தியானிக்கிறோம்.

அதேநேரத்தில், 5000 ஆண்டுகளுக்கு முன்னர் அன்றைய பிருந்தாவனத்தில் ஒலித்த தெய்வீக கீதத்தினை இசைத்த அதே ஆசிரியரின் மறுஅவதாரத்தின் கீதை விளக்கங்களையும் சிந்திக்கிறோம். மிகப்பழமையான, சனாதன ஞானத்தின் கருப்பொருளின் நுண்ணிய தொடர்புகளையும், ஒருமைப்பாட்டையும் உணர்கிறோம்.

எமது விருப்பு, வெறுப்பு ஆகிய சக்திகளுக்கப்பாற்பட்ட நிலையில் நாம் ஏதோ ஒரு மதத்தைச் சார்ந்தவர்களாகப் பிறந்துள்ளோம்; அவ்வாறே நாம் பிறந்த நாடும், இனமும், மொழியும் அமைகின்றது. இவற்றில் சிறந்தது எது? உயர்ந்தது எது? என்று நாம் பிறக்கும்பொழுது தெரிவு செய்து பிறக்கவில்லை. மாறாக எந்த ஒரு பிரிவில் அவதரித்தோமோ, அப்பிரிவில் பற்றுடன் படிப்படியாக இணைந்துள்ளோம். எம் சிந்தனையும் அவ்வமைப்பின் வழியே செழுமையடைகிறது. இன, மத, மொழி, வேற்றுமைகட்கெல்லாம் இப் 'பற்றுதலே' மூலகாரணமாய்அமைகிறது.

"ஸ்ரீ சத்திய சாயி பாபாவின் போதனைகளால் ஈர்க்கப்பட்ட இலங்கைவாழ் பௌத்த மக்கள், தம் மார்க்கத்தின் போதனை – சாதனைக்கேற்ப மனித குலத்தில் இப்பேதங்களைக் காணமுடியாது" என ஹேமாவீரக்கோன் அவர்கள், நந்தினி சமரசிங்க என்பவரால் எழுதப்பெற்ற "தத்துவம் கடந்த உண்மை" (TRANSCENDENTAL TRUTH) என்ற நூலின் அணிந்துரையில் கூறியுள்ளார். இக்கூற்றின் உண்மையை நான் அனுபவரீதியாக உணர்ந்து உள்ளேன்.

"இந்த மனித உருவத்தில், இறைவனின் பரிபூரண சொரூபம், தெய்வீகம், இறைஅம்சம் என மனிதனால் கருதப்படும் அனைத்தும் சங்கமமாய் மிளிர்கின்றது; எனவே ஐயப்பாட்டுடன் நிலைதளம்பாதீர். எவர் ஒருவர் பரிபூரண நம்பிக்கையுடன் என்னைத் தம் உள்ளத்தில் இருத்துகிறாரோ, அவர் என்னை என் உண்மை நிலையில் "சர்வ தெய்வதா சொரூபம்" ஆக (SARVA DAIVATHA SWAROOPAM) காண்பார்" என ஸ்ரீ. ரி. ஜி. கிருஷ்ணமூர்த்தி ஸ்ரீ சத்திய சாயி பாபாவை மேற்கோள்

காட்டித் தனது "அதி உன்னத தெய்வீக மகான் - சாய்" (SAI SUPREME PERSONALITY OF GODHEAD) என்ற நூலில் கூறியுள்ளார். இவ்வுண்மையை, மதவேறுபாடற்ற, பகவானின் மெய்யான தோற்றமென நான் உணர்கிறேன்.

மூன்றாம் பருவமாகிய - தர்மத்தில் சரண்; உலகின் தோற்றமே 'தர்மம்'; தெய்வீக அன்பு அல்லது பிரேமை. "சத்திய சாயி பேசுகிறார்" என்ற நூலின் அடங்கன் XI - பக்கம் 142ல் கூறப்பட்டவாறு முத்திக்கு வித்தாகும் அன்பு நெறியில் சரணடைந்தால் அதுவே, தனிநபர், சமூகம், உலகம் என்பதின் ஆழ்ந்த மும்மூர்த்தியாகின்றது. இக்கூற்றின் உள்ளார்ந்த கருத்தினை நாம் உணர முயல வேண்டும்.

பகவான் ஸ்ரீ சத்திய சாயி பாபாவின் முன்னிலையில், உலக பௌத்தர்கள் குழுமியிருக்கும் இத் தன்னிகரற்ற சபையில், பகவானின் திருவருள் பாலிக்க, அகில உலகுக்குமுரிய புத்த பகவானின் போதனையில் மூழ்கிச் சிந்திப்போமாக!

"சாய் தர்ஷன்" என அழைக்கப்படும் பாரிய நினைவுச் சின்னமொன்று புட்டபர்த்தியிலுள்ள "ஹில்வியூ" அரங்கில் அமைக்கப்படுகிறது. இந் நினைவுச் சின்னம் சர்வதேசரீதியில் சிறப்பிற்குரியதும் வரப்போகின்ற சந்ததியினர்கட்கு நன்மைபயக்கக் கூடியதும்,பாபாவின் சற்போதனைகட்குச் சான்றாகவும் அமையக்கூடியதாய் மிளிரப்போகின்றது. இந்நினைவுச் சின்னத்தில் இலங்கை வாழ் மக்களுக்கும் ஒரு பொருத்தமான பொருளை நிரந்தரகாட்சிககு வைக்க வாய்ப்புத் தரப்பட்டிருக்கிறது. நாம் ஒரு ஓவியத்தை சிபார்சு செய்து அங்கீகரிக்கப்பட்டு இப்போ புகழ் பெற்ற ஸ்ரீலங்கா ஓவியர் சேனக்க சேனநாயக்காவால் வடிவமைக்கப்படுகின்றது. பௌத்த பூர்ணிமாவுடன் தொடர்புடைய மூன்று நிகழ்வுகளில் ஒன்றாகிய ஞான ஒளி பெற்றமையைக் குறிக்கும் ஓவியமே இது.

மலரும் புத்தாயிரத்தில் பௌத்த பூர்ணிமா வைபவத்தின்போது வரலாற்று மிக்க சந்தர்ப்பத்தில் இலங்கைக்கு முக்கிய பங்கைத் தந்ததிற்காக பகவானின் பாதமலரில் சரணடைந்து எமது இதயபூர்வமான நன்றியை நவில்வோமாக.

**செ. சிவஞானம்**
**மத்திய இணைப்பாளர்,**
**இலங்கை.**

---

**"பிரபஞ்சத்தில் ஒரே ஒரு மதம்தான் உள்ளது. அது தெய்வீக அன்பு (பிரேமம்) இந்த தத்துவத்தை தன் இதயத்தில் கொள்ளாத யாருமே இந்துவாகவோ, கிறிஸ்தவராகவோ, பௌத்தராகவோ, முஸ்லீமாகவோ, சீக்கியராகவோ இருக்கமுடியாது. அத்தகையவர் பேயைவிட மோசமானவர். எல்லா மதங்களின் முழு ஒற்றுமை என்னும் தத்துவம் பிரசாந்தி நிலையத்தில்தான் வடிவம் கொண்டுள்ளது. கிறிஸ்தவர்கள் கிறிஸ்துமஸைக் கொண்டாட அறுபத்து நாலு நாடுகளிலிருந்து மக்கள் இங்கு ஒன்று சேர்ந்திருப்பதை நினைத்துப்பாருங்கள். அவர்கள் எல்லோரும் ஒரே இதயம் உடையவர்கள். இதுதான் உண்மையான பக்தி"**

**- கிறிஸ்துமஸ் விழாவில் பாபா -**

# பகவான் காட்டும் பாதையில் பாலர்களை வளர்த்தல்

## தொகுப்பு: திருமதி. சி. இரவீந்திரன், ஹற்றன்.

அறிவு பூர்வமான வாழ்வின் அடையாளம் ஒழுக்கம். பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளைத் தங்கள் கட்டுப்பாட்டில் இருந்து விலகிட நங்கூர மற்ற கப்பல் போல அலைந்து திரிய விடக்கூடாது. பல பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளை உணவூட்டிச் சீராட்டியபின், சுதந்திரத்தின் பெயரால் அவர்களின் நண்பர்களையும், மகிழ்வ டைவதற்குரிய வழிகளையும் தெரிவு செய்ய அனுமதிக்கின்றனர். அவர்களின் மென்மையான மனங்களைப் பாதிக்கக் கூடிய எண்ணப் பதிவுகளைக் கருத்திற் கொள்ளாது, திரைப்படங்களைப் பார்ப் பதற்குக் கூட்டிச் செல்லுகின்றனர். தங்கள் செயல்களுக்குப் பின் ஒருநாள் துயரப்பட வேண்டிவரும் என்பதை உணராது செயற்படுகின்றனர். இவ்வாறு தம் செயல்களினால் தம் சந்ததிக்கே எதிரிகளாகப் பறைசாற்றுகின்றனர்.

**S. S. S 8: 43 4/73.**

குற்றமற்ற குழந்தைகள் வழி தவறிச் சென்றால் பெற்றோர்களே இப்பழியை முதன்மையாக ஏற்க வேண்டும். இன்று பெற்றோர்கள் அளவு கடந்த அன்பைத் தாராளமாகச் செலுத் துகிறார்கள். ஆனால் அத்தகைய அன்பு மட்டும் போதாது. தங்கள் பிள்ளைகளின் மேல் அன்பும் கட்டுப் பாடும் இருக்க வேண்டும். இவ் விரண்டும் இருந்தால் மட்டுமே அன்பு பயனுள்ளதாக இருக்கும். பிள்ளை களுக்கு நல்லொழுக்க, பழக்க வழக்கங்களைக் கற்றுக்கொடுப்பதற்குப் பெற்றோர் அதிக சிரத்தை எடுப்ப தில்லை. தங்கள் பிள்ளைகளுக்குப் பணத்தைத் தாராளமாக வழங்கி அதிக சலுகை காட்டுகிறார்கள். நல்ல பண்புகளைத் தங்கள் குழந்தை களுக்கு உணர்த்த வேண்டும் என்பதைப் பெற்றோர் ஒரு கணமேனும் சிந்திப்பதில்லை. பெற்றோர்களே தம் பிள்ளைகளுக்குச் சீரிய பழக்கங்களை யும், மனப்பான்மைகளையும், நெறி முறைகளையும் கற்றுக் கொடுக்க வேண்டும். தம்பிள்ளைகளை, எப்படியும் வாழலாம் என்று விட்டுவிடுவது முறையல்ல. தம்பிள்ளைகள் மாசற்ற வாழ்க்கையை நடத்தி, நல்லொழுக் கத்துடன் வாழ்ந்து நற்பெயரைப் பெற்றால் மட்டுமே பெற்றோர்கள் மகிழ்ச்சி அடைய வேண்டும்.

குழந்தைகள் மீது அன்பு செலுத்துவது தவறல்ல. ஆனால் பெற்றோர்கள் தம்பிள்ளைகள் மீது எப்படி அன்புசெலுத்த வேண்டும் என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டும். தம் பிள்ளைகளுக்கு உணவு, கல்வி, உலக அறிவு வழங்குவதோடு பெற்றோர்களின் கடமை முடிவதில்லை. பிள்ளை களுக்குச் சரியான மேம்பாடுகள் சொல்லிக் கொடுக்கப்பட வேண்டும். தேவைகளை நிறைவு செய்தல், பணம் சம்பாதித்தல் வசதிகள் தேடுதல் மட்டுமே வாழ்க்கையின் நோக்கமும், முடிவும் என்று குழந்தைகள் எண்ணும் வகையில் அமையக் கூடாது.

**S. S. S 3/84 60**

தீய பிள்ளைகள் எவருமே இல்லை. சீராக வளர்க்கப்படாத பிள்ளைகளே உள்ளனர். இளம் பிராயத்தில் இருந்தே தம் பிள்ளை களைச் சரியான பாதையில் நடத்துவது பெற்றோரின் கடமை. தீய குழந்தைகள் பலரை வைத்திருப்பதை விட ஒரு நல்ல மகனை வைத்தி ருப்பது எவ்வளவோ மேல். பிள்ளை

களின் நலம் கருதி, பெற்றோர்கள் தங்கள் மீதும் கட்டுப்பாடுகளை விதிக்க வேண்டும். ஒருவர் வாழ்க்கையில் இளமைப்பருவம் மிகவும் பிரதானமானது. அவை தவறாகச் செயற்படவோ வீணாக்கப்படவோ கூடாது. சில பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகள் தங்கள் சொற்களைக் கேட்பதில்லை என்று கூறுகிறார்கள். இது பலவீனத்தின் அடையாளம். பிள்ளைகள் ஏன் தங்கள் பெற்றோருக்குக் கீழ்ப்படிய மறுக்க வேண்டும்? பிள்ளைகளை ஆரம்பத்திலிருந்தே பெற்றோரையும் முதியோரையும் மதித்து நடக்கக் கற்பித்திருந்தால் இப்படியான மனோபாவம் ஏற்பட்டிராது. வீட்டிலே கீழ்ப்படியாத பிள்ளைக்கு இடமில்லை. பெற்றோர் பிள்ளைகள் மீது நடவடிக்கை மேற்கொள்ளும் போது மனவுறுதியுடன் நடக்க வேண்டும். அப்போதுதான் அவரகள் நல்வழி படுத்தப்படுவர். பெற்றோரும், ஆசிரியரும் ஒழுக்கத்தை வலியுறுத்தத் தவறியதால்தான் மாணவர்கள் பொறுப்புணர்ச்சியற்ற வழிகளில் நடக்கவும், குழப்பத்திலும் வன்முறையிலும் ஈடுபடுகின்றனர்.

**S. S. S 3/84**

ஒற்றுமை, அமைதி, ஒருவருக்கொருவர் செலுத்தும் அன்பும் மதிப்பும் தான் குடும்பத்தில் அமைதியையும், மகிழ்ச்சியையும் கொண்டுவரும். அதனால் குழந்தைகளுக்கு ஒரு மோசமான உதாரணமாக பெற்றோர் எப்போதும் நடந்துகொள்ள கூடாது. பிள்ளைகள் ஆன்மீக முன்னேற்றத்திலும், கல்வியிலும் ஆர்வம் காட்டினால் பெற்றோர்களும் அவர்களை ஊக்கப்படுத்த வேண்டும். அவர்கள் தம்பிள்ளைகளுக்குச் சிறந்த முன் உதாரணங்களாக இருக்க வேண்டும். பிள்ளைகளின் தெய்வீகத் திறன்களை விருத்தி செய்வதற்கு எல்லா வசதிகளையும் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்.

**S. S. S**

ஒரு பிள்ளை தானம், சேவை, பக்தி, கடவுள் நம்பிக்கை முதலிய வற்றில் ஈடுபாடு கொண்டவனாக ஆன்மீக வாழ்வு வாழ்ந்தால், "இதென்ன பைத்தியம்,இப்படியெல்லாம் போகாதே"! என்று புலனின்ப வாழ்வில் திருப்பும் பெற்றோர்கள் நிறைய இருக்கிறார்கள். அதனால் இன்று திருதராஷ்டிரனைப் போல, ஹிரண்ய கசிபுவைப் போல தந்தை, தாய் இருக்கின்றனரே தவிர, உயர்ந்த இலட்சியங்களுடன் குழந்தைகளை வழிநடத்திச் செல்ல யாருமே இல்லை. அதனால் குழந்தையை நேசியுங்கள். ஆனால் தவறு செய்தால், கண்டிப்பான தண்டனை கொடுங்கள். பிள்ளைகளைக் கண்டித்தால், அவன் வீட்டை விட்டு ஓடிவிடுவானோ, தற்கொலை செய்து கொள்வானோ, என்று சில பெற்றோர்கள் அஞ்சுகின்றார்கள். முதலில் பெற்றோர்கள் தங்களை நேர்ப்படுத்திக் கொள்ள வேண்டும்.

***பாபாவின் ஆனந்தலஹரி* 69, 70, 72**

சுயநலம், சௌகரியம், ஆகியவைகளை அடிப்படையாகக் கொண்டு, கடமையைச் செய்யும்போது அங்கே தர்மம் மறைந்து விடுகிறது.

***தர்மவாஹினி* 15**

இன்றிலிருந்து உங்களைத் திருத்திக் கொள்ளுங்கள். கோபமும் பொறாமையும் மட்டும் வேண்டவே வேண்டாம். நல்ல மனதுடன், நல்ல எண்ணங்களுடன் வாழ்க்கை நடத்துங்கள்.

***ஆனந்தலஹரி* 76 – 77**

புலனையும், மனதையும் கட்டுப் படுத்த வேண்டுமென்று ஸ்வாமி உங்களிடம் கூறும்போது அப்படிச் செய்தால் செயலாற்ற முடியுமா? வாழ முடியுமா? என்று நீங்கள் நினைக்கலாம்; வியக்கலாம். பிரேக்கின் மீது காலை வைத்துக் கொண்டே, காரை ஓட்டும்படி ஸ்வாமி உங்களிடம்

கூறவில்லை. ஆனால் ஏதாவது ஆபத்து வருமாகில், காரை நிறுத்த நீங்கள் பிரேக்கைப் போடவேண்டும் என்றுதான் கூறுகிறேன். தீய எண்ணம் உணர்வுகள் முதலியவற்றை நீங்கள் கட்டுப்படுத்த வேண்டும்.

**பாபாவின் கீதைப் பேருரை II 86.**

சினமுட்டப்பட்டாலும், உண்மையாகவும் நீதியாகவும், அமைதியாகவும் இருங்கள். மற்றவர்களுடன் மேற்கொள்ளும் தொடர்புகளில் முழு அன்புடன் இருங்கள். நீங்கள் உண்மையுள்ளவராக இருந்தால், பிள்ளைகளும் சத்யம், தர்மம், சாந்தி, பிரேமையுடன் வளர்வார்கள்.

இறைவன் உள்ளே குடியிருப்பதாக அறிந்தபின் ஒவ்வொருவரும் தம்கடமையை இறை வணக்கமாகச் செய்வர். பிள்ளைகள் தங்கள் பெற்றோர்களைப் போற்றி உயர்வாக மதிக்க வேண்டும். அது அவர்கள் கடமை. பெற்றோர் தங்கள் பிள்ளைகள் அறிவுக் கூர்மையுள்ள, ஒத்திசைவான பிள்ளைகளாகவும், தம் உணவுக்காக உழைத்துச் சம்பாதிப்பதுடன், துன்பப்படும் மற்றவர்களுக்காகவும் உதவக் கூடியவர்களாகவும் வளர்த்தெடுக்க வேண்டும். இக்கடமையைத் தட்டிக் கழிப்பின், தமது வழிபாட்டில் தவறியவராவார். இன்னும் ஒரு பொறுப்பு பெற்றோர் மேல் உரித்துடையது. அவர் தர்ம சாஸ்திரத்தில் கூறியபடி கிரகஸ்தனாக வாழ வேண்டும். அதனால் இளம் மனதில் ஒரு தூய மகிழ்ச்சியான வாழ்க்கையின் படத்தைப் பதிக்க முடியும். பெற்றோர் குடிகாரனாக, சூதாட்டக்காரனாக, ஏமாற்றுப் பேர்வழியாக இருப்பின், பிள்ளைகளைப் போதிப்பதன் மூலம் திருத்த முடியாது. நான் குழந்தைகளையும், மாசற்ற வாலிபரையும் விரும்புகிறேன் அவர்களைக் குறை கூறுவதை நான் அனுமதிக்க மாட்டேன். இக்குற்றம் முழுமையாக முதியோரினதும், பெற்றோர்களினதும் தலைவர்களினதும் நடத்தையிலேயே உள்ளது. இவர்கள், வாழும் முறைகளினால் உருவாக்கும் விதி முறைகளையே பிள்ளைகள் மனதில் வாங்கிக் கொள்கிறார்கள்.

S. S. S 9/36.

## SANATHANA SARATHI இல் பகவான்

### ௐ நீயும் தெய்வீகமும்

முதலில் உன்னை அறி, பின்பு தெய்வீகத்தை இலகுவில் நீ அறிய முடியும். கடவுள் மேல் நம்பிக்கை வை. கடவுள் செய்ய முடியாதது ஒன்றுமே இல்லை. நல்ல கண் பார்வை உள்ளவர் சின்ன மின்மினிப் பூச்சியையும் பார்க்க முடியும். குருட்டு மனிதன் பிரகாரமான சூரியனைக்கூட பார்க்க முடியாது. அதே போல, ஆத்மீக கண் இல்லாதவர் தன்னைச் சுற்றி இருட்டையே காண்பார்.

### ௐ கவலைகளும் துன்பமும்

மக்கள் கவலைகள் பற்றியும் துன்பம் பற்றியும் பேசுவது உண்டு. ஆனால், எனக்கு அவை பற்றித் தெரியாது. என்னுடைய தூய்மையால் அவை என்னை

அணுகுவதில்லை. கெட்ட எண்ணங்களும் கெட்ட நடத்தையும் உள்ளவர்களையே கவலைகளும் துன்பமும் பாதிக்கின்றன.

### ௐ சுவாமியின் உணர்வுகள்

சுவாமியின் உணர்வுகள் தூய்மையாகவும் சீராகவும் உள்ளன. இந்த விடயத்தில் சுவாமியைப் பின்பற்ற முயலுங்கள். நீங்கள் சுவாமியின் பக்தர்கள் என்று உரிமை கொண்டாடுகிறீர்கள். அப்படியானால் சுவாமியின் தூய்மையில் ஒரு சிறு பகுதியை யாவது கடைப்பிடிப்பது உங்கள் கடமை அல்லவா?

### ௐ என்றும் இளமை

நீங்கள் என்றும் இளமையாக இருக்க விரும்பினால், உங்கள் உணர்வுகளைக் கட்டுப்படுத்த வேண்டும். சுவாமி இதற்கு நேரடி உதாரணம். எனது தேகம் சக்தி நிரம்பியது. என்னிடம் எவ்விதமான மெலிவும் இல்லை. இப்போதுகூட நான் துரிதமாக ஓடுவேன், சுவாமிக்கு 75 வயது என்பதை யாராவது கற்பனை செய்வார்களா? இதன் இரகசியம் என்ன? இதற்கு காரணம் தூய்மை, பொறுமை, விடாமுயற்சி என்பனவாகும் - Purity, patience and perseverance.

### ௐ ஆத்மீகத்திற்கு சுய முயற்சி

மின்னல் ஒளிக்குப் பின் மை இருட்டு, அதேபோல் வாலிபத்திற்குப் பின் வயோதிபம். காலையில் மலரும் பூ மாலையில் வாடுகின்றது. இப்படியாகத்தான் மனித உடலின் சங்கதியும். உடல் மேலும் மனம் மேலும் கட்டுப்பாடு வைக்கவும். மற்றவர்கள் செய்வார்கள் என்று இருக்க வேண்டாம். இன்னொருவர் உணவு உண்டால் உங்கள் பசி ஆறுமா? இல்லை. ஆத்மீக பாதையில் முன்னேறுவதற்கு சுய முயற்சி மிகவும் தேவையாகும்.

### ௐ நான் வருவேன்

தெய்வீகத்தில் மூழ்கி இருப்பவர்களே எனக்குப் பிரியமானவர்கள். அவர்கள் எனது அன்பின் நண்பர்கள். சுவாமியின் அருமையான நண்பர்களாக இருக்க நீங்கள் விரும்பினால், தெய்வீகமான முறையில் ஒழுகுங்கள். அப்படி இருப்பின், நீங்கள் இங்கே (புட்டபர்த்திக்கு) வர வேண்டியதில்லை, நீங்கள் எங்கே இருந்தாலும் நான் அங்கே வருவேன்.

### ௐ இளைஞர்களே!

ஞாபகத்தில் இருக்கட்டும்: நீங்கள் தான் ஸ்ரீ சத்திய சாயி நிறுவனத்தின் தீவட்டிக்காரர்கள் (வழிகாட்டிகள்). நிறுவனத்தின் மூத்தவர்கள் வயோதிபராகி, சில பிரச்சினைகளுடன் இருக்கலாம். வாலிபர்கள்தான் எதையும் ஆரம்பித்து, முன்னின்று நிறுவனத்தை நடாத்த வேண்டும். ஒவ்வொரு வட்டார நிறுவனமும், பாரிய பொறுப்புகளை ஏற்கத்தக்க ஒரு இளைஞர் தலைவரைக் கொண்டு இருக்கவேண்டும். அரசியலில் இருந்து உங்களைத் தூரவைத்துக் கொள்ளுங்கள்.

### ௐ கடவுள் மேல் மனம்

நடனம் ஆடுபவரின் கைகளும் கால்களும் மிகத் துரிதமாக அசைவதை நீங்கள் அவதானித்திருப்பீர்கள். ஆனால் அவளின் கவனமோ சுருதி லயம் மேல்

இருக்கும். அதேபோல, நீங்கள் வேலைகள் செய்யும்போது, உங்கள் மனம் கடவுள்மேல் பதிந்து இருக்க வேண்டும்.

### ॐ உண்மையான ஆத்மீக ஒழுக்கம்

தியானம் ஒரு நேரத்திற்கோ இடத்திற்கோ அடங்குவதில்லை. அது ஒரு வாழ்வு முறை. அன்பின் வழியில் எதைச் செய்தாலும் அது தியானம்தான் மக்களிடம் அன்பு வைக்காமல், மணிக்கணக்கில் தியான நிலையில் இருப்பது, தியானமே அல்ல. மற்றவர்களுடன் கை கோர்த்து, முழுச் சமூகத்தின் முன்னேற்றத் துக்காக சேவை செய்வதே, உண்மையான ஆத்மீக சாதனை ஆகும்.

### ॐ தெரிந்து கொள்

மக்கள் கடவுளைத் தேடிப் பல விதமான ஆத்மீக சாதனைகளில் ஈடுபடுகிறார்கள். கடவுள் உன்னு ள்ளே இருக்கும்போது, ஏன் அந்தத் தேடல்? நீதான் கடவுள், ஆனால் அந்த உண்மையை நீ உணர்வது இல்லை. இப்போது அதைத் தெரிந்துகொள்.

### ॐ பண்பாடு(கலாச்சாரம்) பற்றி...

பண்பாடு பற்றிய சுவாமியின் வரைவிலக்கணம் மிகவும் விரிந்த தாகும். அவருக்குப் பண்பாடு என்பது, நமது நடத்தையின் விவரமோ, சமூக குணங்களின் வெளித்தோற்றங்களோ அல்ல. அது நமது சிந்தனை, சொல், செயல் ஆகியவற்றை வெளிப் படுத்தும் எமது உள்ளார்ந்த குணங்களாகும். அவற்றில் இருந்தே மற்றவை வெளிவருகின்றன. அப்படியானால் எமது சமஸ்காரத் தின் (மனோநிலை, நோக்கம்) தொழிற்பாட்டின் வெளித்தோற்றமே பண்பாடு ஆகும். எல்லாம் எம்முள் உள்ளன. சூழலின் பங்கு சிறிசுதான்.

### ॐ சேவை இதயத்திற்கு மருந்தாகும்

உனது இதயத்தின் வேதனையைக் குணப்படுத்துவதற்காகச் சேவை செய்யவும்; உங்கள் சங்கத்தின் சட்டம் சேவையை அங்கத்தவர் களுக்கு வற்புறுத்துவதால் அல்ல, அதனால் பெரிய இடத்து அங்கீகாரம் கிடைக்கும் என்பதால் அல்ல, அது நல்ல அந்தஸ்த்தில் இருப்பவர்களின் 'கடமை' என்பதால் அல்ல. சேவை செய்யுங்கள், ஏனெனில் சேவை செய்யாவிடில் உங்களுக்கு அமைதி வராது. உறவுகளை உணர்வதற்கு, அது உள்ளத்தின் தூண்டுதல் ஆகும்.

[ஆதாரம்: **SANATHANA SARATHI, APRIL 2000**]

இன்று பெண்பாலர்க்குப் பள்ளிக்கூடங்களிலும், கல்லூரிகளிலும் வழங்கப்படும் கல்வியானது விரும்பிய மனைவியரை உருவாக்குகிறதேயன்றி விரும்பிய அன்னையரை உருவாக்கவில்லை.

- பாபா -

# புகைக்கரி புத்தர்

# (THE SOOTY BUDDHA)

சுவாமி: ஜோதிர்மயானந்தா

திபத்து தேசத்தில் ஆயிரம் புத்தர்கள் கொண்ட ஒரு கோவில் உண்டு. ஒரு பக்தர் தனது வழி பாட்டுக்கென ஒரு புத்தரை தெரிவு செய்தார். ஒவ்வொரு நாளும் சில ஊதுபத்திகளையும், ஒரு நெய் விளக்கையும் கொண்டு வந்து, தான் தெரிவு செய்த புத்தருக்கு முன்னால் வைப்பார். ஆனால், அவரது பத்தி யின் நறுமணம் மற்றப் புத்தர்களுக்கும் பரவும். இதனால் அவர் கவலைப்பட்டார் (upset ஆனார்). அவர் கொண்டு வந்த ஊதுபத்தி மிகவும் விலையானது, அதன் நறுமணம் தனது புத்தருக்கு மட்டுமே வீச வேண்டும், மற்ற சிலைகளுக்குப் படப்படாது என்று நினைத்தார்.

மிகவும் சிந்தனை செய்த போது, மற்றப் புத்தர்களுக்கு வாசனை போகாமல் பண்ணுவதற்கு ஒரு 'ஐடியா' தோன்றியது. சில காட்போட் மட்டைகளை எடுத்து தனது புத்தரைச் சுற்றி அடைத்தார். இப்போது அவருக் குப் பெரும் மகிழ்ச்சி. அவரது தீப ஒளியும், பத்திகளின் நறுமணமும் அவரின் புத்தருக்கே நேரிலே சென்று சுவறியது. ஆனால், ஒரு கிழமையில், ஐயகோ, அவருடைய புத்தர் கறுப்பாகி விட்டார். முழுப் புகையும் அவருடைய புத்தரின் அடைப்பிலேயே காணப் பட்டது.

வாழ்க்கையில் எல்லா மகிழ்வும் உனக்கே வரவேண்டும், மற்றவருக்கு ஏற்படக் கூடாது என்று எண்ணுபவராக நீ இருந்தால், நீயும் அந்த மனிதன் போல்தான். உன்னைச் சுற்றி, 'நான், எனது' என்ற மதில் கட்டினால், உனது ஆத்மா சுருங்கி, மகிழ்ச்சி குறையும். உன்னில் இருக்கும் புத்தர் அல்லது ஆத்மா, சுயநலத்தினால் கரிபிடிக்கும். எல்லாவற்றையும் உனக்கென்று அடக்கினால், நீ மகிழ்ச்சியைக் காணமாட்டாய். அதற்கு மாறாக, உனது செயல்களில், உனது இதயம் திறந்து, ஆத்மா அடைபடாமல் விடுபட்டால், உனக்கு உள்ளே இருக்கும் புத்தர் பிரகாசமாக ஒளி வீசுவதையும், ஆத்மா குதூகலிப் பதையும் காண்பாய்.

(நன்றி: SAI JEWELS மலேசியா)

---

**முத்தை எடுத்துக்கொள். சிப்பியை அப்பால் எறி. உன் குருவால் உனக்குக் கொடுக்கப்பட்ட மந்திரத்தை, அறிவுரையைப் பின்பற்று. உன் ஆசிரியரின் மனவலிவின்மைகளை ஆராய்வுக்கு எட்டாதே.**

**~ ராமகிருஷ்ணர் ~**

## பிள்ளைகளுக்கான ஆங்கில அரிச்சுவடி அறிவுரை

**தந்தவர்: திருமதி பி. அருள்சுந்தரம், மட்டக்களப்பு**

| | | |
|---|---|---|
| A - | Always depend on God | என்றும் தெய்வ நம்பிக்கையோடு வாழ். |
| B - | Bear insult, Bear injury | நிந்தனையை அவமதிப்பை சகித்துக்கொள். |
| C - | Control the tongue | நாவை அடக்கு. |
| D - | Do not cheat anybody | எவரையும் ஏமாற்றாதே. |
| E - | Evil Company is dangerous | கெட்டவர்களின் சேர்க்கை ஆபத்தானது |
| F - | Fear sin | பாவத்திற்குப் பயப்படு. |
| G - | Give Give Give | கொடு கொடு கொடு |
| H - | Helping others is virtue | பிறருக்கு உதவுவது நற்பண்பாகும். |
| I - | Innocence is divine | களங்கமற்ற மனம் தெய்வீகம். |
| J - | Jepa is your cup of tea | ஜெபம் ஊக்கம் தரும் பானம் (தேநீர்) |
| K - | Knowledge is the fruit | ஞானம் சுவைமிக்க கனியாகும். |
| L - | Live for others | பிறருக்காக வாழ். |
| M - | Mind deceives – Beware | எமது மனமே எம்மை ஏமாற்றும் - கவனமாக இரு. |
| N - | Nip anger in the bud | கோபத்தை முளையிலேயே கிள்ளிவிடு. |
| O - | Overcome greed | ஆசையை வெல்லு |
| P - | Pure mind is your friend | பரிசுத்த இதயம் பண்பான நண்பன். |
| Q - | Quietness will lead you to progress | அமைதி முன்னேற்றத்தைத் தரும். |
| R - | Recite the name of God | கடவுளின் நாமத்தை எப்போதும் உச்சரி |
| S - | Speak sweetly, speak softly | இனிமையாகவும் மென்மையாகவும் பேசு |
| T - | To love is to serve. | அன்பு காட்டுவது பெரிய சேவை |
| U - | Understand yourself | உன்னை விளங்கிக்கொள். |
| V - | virtue is your ornament | உனது பண்புகளே உனது ஆபரணங்கள். |
| W - | Within you is bliss | உனக்குள்ளேயே பேரானந்தம் உண்டு |
| X - | (E)Xert yourself for good | நல்லனவற்றிற்காகப் பாடுபடு. |
| Y - | Your treasure is God | தெய்வமே உனது மேலான பொக்கிஷம் |
| Z - | Zero has no value if not attached to unit (the one), life has no value if not attached to God | எண்ணோடு இணையாத பூச்சியத்திற்கு பெறுமதி இல்லை. அதேபோல், கடவுளோடு இணையாத வாழ்விற்கு பெறுமதி இல்லை. |

ஆசிரியர்கள், ஆங்கில வகுப்பின் போது இதை விளக்கிக் கற்பிக்கலாம்.

# சாயி அன்பர்களுக்கு பகவானின் அருளுரை

நீங்கள் ஒவ்வொருவரும் பணி ஆற்ற வேண்டிய கால கட்டத்தில் எனது நோக்கம் வந்தடைகிறது. இந்த பரந்த அகிலத்தில் இருக்கும் இந்த பூமிக்கும் ஒரு நோக்கம் இருக்கிறது. அந்த நோக்கம் இப்போது ஒவ்வொரு வர கண்மீதும் விரிகிறது. பக்தி எனும் பலத்தை வெளிப்படுத்தும் போது உங்கள் பகுதியை ஒழுங்காக செய்வதற்கு என்னை மையமாக வைத்துக் கொள்ளுங்கள். உங்களது வேலைக்கான பலனை எதிர்பார்க்காத நிலையை வளர்த்துக் கொள்ளுங்கள்.

இதே நோக்கத்தின் இந்த பகுதி மிக மிக அமைதியாக நடைபெறவேண்டும். எனது அன்பு எனும் ஊற்று வெளிப்படும் உறுப்புக் களே நீங்கள் ஆணவத்தை வளர்த்துக் கொண்ட அடுத்த கணமே எனது வேலை நின்றுவிட்டதாக அறிந்து கொள்ளுங்கள். எதையும் பொருட் படுத்தாத மனநிலையை அடைந்தவுடன் எனது சக்தியாகவே ஆவீர்கள்.

எனது இந்த பெருக்கப்பட்ட அன்பு இந்த உலகம் முழுவதும் உணரப்படும். பல அவதாரங்களின் மூலம் நான் உங்களை இந்தப் பணிக்காக தயார் செய்திருக்கிறேன். நான் உங்களை என்பால் இழுத்திருக் கிறேன். எனது இந்த நோக்கத் திற்காக பல அவதாரங்களின் மூலம் பல நிலைகளைக் கடந்திருக்கின்றேன். எனது பணி அழிவற்றது. உங்களது வேலையும் அவ்வண்ணமே முடிவற்றது. நான் உங்களுக்குள்ளேயும்வெளியேயும் இருப்பதை அறியுங்கள். இதில் ஒரு வேறுபாடுமில்லை. சாதாரண விஷயங் களிலிருந்து உங்களை விடுவித்துக் கொள்ளுங்கள். நீங்களே நான், நானே நீங்கள் அனைவரும். இதில் ஒரு வேறுபாடு இல்லை. எனது தரிசனம் உங்களால் உங்களுக்குக் கிட்டும். இந்தத் தொடர்ச்சியான வேலையை நீங்கள் உணர மாட்டீர்கள். மனத் திலும் ஆத்மாவிலும் புனிதமாயி ருங்கள். மனித குலமே உங்களது இந்தக் குணங்களால் மேம்பாடு அடையும்.

நான் அழைக்கும்போது மற்றவர் களும் என்னை அடைவார்கள். இவ் உலகம் முழுவதும் ஒற்றுமையாக வாழும் காலம் நெருங்கிக் கொண்டிருக் கின்றது. நீங்கள் எதிர்பார்ப்பதற்கு முன்பே அந்தக் காலம் நெருங்கி வரும். படைப்பின் உண்மை நிலையை வாழுகின்ற அவைருக்கும் உணர்த்த தேவையான எல்லாச் சாதனைகளுடன் நீங்கள் அனைவரும் அதற்காக தயாராக இருங்கள். அது ஒன்றும் நீங்கள் நினைத்துப் பார்க்க முடிகின்றதொன்றல்ல. வேண்டக் கூடியது ஒன்றுமல்ல. எல்லா வடிவங்களுக்கும் எதிர்பார்ப்புகளுக்கும் அப்பாற்பட்டது. எல்லாக் கனவுகளுக் கும் அப்பாற்பட்ட ஒரு அழகு என்று மட்டும் உங்களுக்குச் சொல்வேன் இந்த அமைதிப்பணியை நீங்கள் ஒவ்வொருவரும் செய்யும்போது நான் உங்களை என் இதயத்தில் அணைத் துக்கொள்வேன். இன்று முதல் உங்களது ஆன்மா உயரும். உங்களது கண்கள் நான். நான் உங்களுக்குள்ளேயே இருப்பதை வெளிக்காட்டும்.

அகிலம் முழுவதையும் ஒன்றாக்கும் இறைவனின் மலை உச்சியில் இருந்து இதை நான் எனது அன்பர்கள் அனைவருக்கும் உரைக்கிறேன்.

எனது அன்புக்குரிய பக்தர்களே எனது வேலையில் ஈடுபடுங்கள். சொர்க்கத்தின் வாசனையை உங்களது மூச்சு எடுத்துச் சொல்லட்டும். உங்களது செயற்பாடுகள், தேவதைகளின் செயல்களாகட்டும். உங்களது ஆனந்தமே எனது ஆனந்தம்.

(நன்றி: பகவான் ஸ்ரீ சத்திய சாயி சேவா நிலையம்; வவுனியா)

## அன்புடன் எம்மைக் காப்பீர்

திருமதி சரஸ்வதி கனகரத்தினம் . கோப்பாய்

ஞானத்தின் உருவாய் வந்து
ஞாலத்தைக் காத்து நின்று
நாமமும் விளங்க நன்றே
நானிலம் போற்றி நிற்கும்
மானிட தெய்வம் நீரே
மனதினி லும்மை நாமும்
நாளிலும் பொழுதும் நாவால்
நடமொடு ஏத்தி நின்றோம்.

அதர்மம் குன்றிட அவலமோங்கி
அகிலம் அழியுங்கால் அவதரித்தீரே
தர்மமும் தான் நிலைக்கும்
தயவொடு சாந்தி ஓங்கும்
என்றெல்லாம் எண்ணி நன்றாய்
எக்காள மிட்டு நின்றோம்
எங்களின் இதயத் தேக்கம்
எட்டவே இல்லைப் போலும்!

பஜனை தான் தரும் அமைதி
பாபா! உன்நாமம் சொல்லிக்
கடவுளர் கண்டோம் யாமும்
கவலைகள் கலைய நின்றோம்
சத்தியம் தர்மம் சாந்தி
நித்தியம் பிரேமை கண்டோம்
அத்தனுன் அபயக் கரந்தான்
ஆறுதல் அளிக்கக் கண்டோம்

அகிலத்தில் அழிந்து தர்மம்
அதர்மமே மிகுந்த வேளை
அவ்தாரம் பலவும் செய்து
அழிவினில் மனிதம் காத்த
பகவானே! பணிந்தோம் பாபா!
பணிவுடன் வேண்டி நிற்போம்
பாமாலை சூட்டி நின்றோம்
பாங்குடன் எம்மைக் காப்பீர்

அன்பினால் அகிலம் ஆளும்
அவதாரத் தெய்வம் நீதான்
இன்பமே சூழ வைப்பாய்!
இனியவெம் ஈழ நாட்டில்
மன்பதை மாளா நிற்க
மலிந்தின இணக்கம் கண்டு
அன்புடன் இன்பாய் வாழி
அனுதினம் காத்து நிற்பீர்

பிறந்திட்ட பிரேமை ஆண்டில்
பிறக்கட்டும் விடிவு எங்கும்
மறக்கட்டும் பகைமை எல்லாம்
சிறக்கட்டும் பிரேமை தானும்
அளிக்கட்டும் அபயம் உன்றன்
அன்புடைக் கரங்கள் தாமும்
களிப்புற்று உலகம் வாழக்
காண்போமே சாந்தி மார்க்கம்

## திட பக்தி வேண்டும்

நித்தியானந்த நித்திய வஸ்துவாகிய இறை எம்முடன் என்றும் உள்ளது. அது நம்மை விட்டு ஒரு காலத்திலும் பிரியாதது. அதை உணர்வதே வீடு. அதைப் புசிப்பதே பேரின்பம். அதில் சொக்குவதே இறவா இன்பம். நாம் வேறு கடவுள் வேறு எனுமெண்ணம் நமக்கொரு காலத்திலும் இருக்கப்படாது.
பரம் ஒன்றே எக்காலத்தும் நம்மை விட்டுப் பிரியாமலிருக்கின்றது. நம் உயிருக்குயிராய், நம் அறிவினுக்கறிவாய் நம்மை விட்டுப் பிரியாதிருக்கின்றது. நமக்கு என்றும் வழி காட்டுவதும் அதுவே.
கடவுளுடைய ஆசீர்வாதம் நமக்கெப்பொழுதும் உண்டு. அதைப்பற்றி நமக்குச் சற்றேனும் ஐயமிருக்கப்படாது.
எல்லாம் ஈசன் செயல் எனும் உணர்ச்சி நாளாந்தம் வளர்ந்துகொண்டு போக ஒரு பொல்லாப்புமில்லை. திடபக்தி வேண்டும். கடவுளிலே பூரண விசுவாசமிருக்க வேண்டும். அதைவிடச் சிறந்த கவசம் வேறொன்றுமில்லை. என்ன வந்தாலும் அசையாமலிருக்கப் பழக வேண்டும்.

- யோகர் சுவாமிகள் -

# பிரார்த்தனையின் சக்தி

கடந்த 1983 நவம்பர் 23ம் திகதி தன்னுடைய பிறந்தநாள் செய்தியின் போது பகவான் தன்னுடைய பக்தர்களின் நாளாந்த பிரார்த்தனைகளுடன், பிரபஞ்சம் அனைத்தின் நலனுக்காகவும் வேண்டி "லோக சமஸ்தா சுகினோ பவந்து" என்ற பிரார்த்தனையையும் சேர்க்குமாறு கூறினார். "அனைத்து உலகங்களிலும் இன்பம் நிலவுவதாக" என்ற இந்த வேத சுலோகத்தை நாளாந்த பிரார்த்தனைக்கு பகவான் சிபாரிசு செய்தார்.

அனைத்து நாடுகளிலும், ஆதிகால தீர்க்கதரிசிகள் பிரார்த்தனையின் பலனை அறிந்திருந்தார்கள். இப்பொழுது விஞ்ஞானம், தொழில்நுட்பம் ஆகியவற்றிலேயே பூரண நம்பிக்கை வைத்திருக்கும் நாட்டிலிருந்தே, பிரார்த்தனையின் சக்தி, தியானம் ஆகியவற்றை விஞ்ஞான ரீதியாகப் பரிசோதித்து நிரூபிக்க முடியும் என்ற சாட்சியம் கிடைத்திருக்கிறது.

லண்டனிலிருந்து வெளியாகும் காலாண்டு சஞ்சிகை ஒன்றில் திரு. றொன்லெயிங் என்பவர், ஐக்கிய இராச்சியத்தில் ஒரு சிறிய மாநிலமான றோட்தீவில் நடைபெற்ற ஒரு ஆராய்ச்சி பற்றிக் குறிப்பிட்டுள்ளார். அவர் சொல்கிறார்.

ஆதிகாலம் தொட்டு உலகெங்கும் உள்ள மடாலயங்களில், அவை எம்மதத்தைச் சேர்ந்தவை ஆயினும் சரி, மனோசக்தி (அல்லது பிரார்த்தனை) நிபுணர்கள் இருந்திருக்கிறார்கள். வெகு சிலரே இதன் அனுகூலத்தை அறிந்திருக்கிறார்கள். அவர்கள் இல்லாவிட்டால் உலகம் தற்போதைய நிலையிலும் பார்க்க மிகமோசமான நிலையை அடைந்திருக்கக்கூடும். சிலர் நினைப்பதுபோல துறவிகள் உலகச் செயற்பாடுகளில் இருந்து விலகிச் செல்பவர்களல்லர். மிக அவசியமானதும் உபயோகமானதுமான சேவையை செய்து கொண்டு இருக்கிறார்கள்.

ஐக்கிய ராச்சியங்களின் மாநிலங்களில் ஒன்றான றோட்தீவில் நடைபெற்ற ஒரு பரிசோதனை இதை உறுதிப்படுத்துகின்றது. இச் சிறிய மாநிலத்தில் வாழ்க்கையின் தன்மையைச் சீர்திருத்தும் பொருட்டு முந்நூறு தொண்டர்களைக் கொண்ட ஒரு குழு தியானத்தில் ஈடுபட்டது. நான்கு பேர்களைக் கொண்ட எழுபத்தைந்து குழுக்களாக அவைகள் பிரிந்து மாநிலத்தின் வெவ்வேறு இடங்களுக்குப் பரந்து சென்றனர். 1978 யூன் 12 தொடக்கம் செப்ரெம்பர் 12 வரை ஒவ்வொரு குழுவும் ஒருநாளைக்கு இருமுறை ஒரு மணித்தியாலத்துக்கு தியானத்தில் ஈடுபட்டது. இதன் பலன் ஆச்சரியப்படத்தக்க வகையில் அமைந்திருந்தது. தற்கொலை 45% வீதி விபத்து 48% குறைந்திருந்தது. மிக உணர்ச்சிகரமான வீழ்ச்சி கொலையில் காணப்பட்டது. 53% அது குறைந்திருந்தது. மொத்த மரணதொகை 11% வீழ்ச்சியடைந்தது.

1977ம் ஆண்டிலும் பார்க்க 10% அதிகமான சூரிய ஒளி உள்ள நாட்கள் இருந்ததாக தேசிய கால நிலைச் சேவை தெரிவித்தது. இந்தப் பிந்திய புள்ளி விபரம் விசேட அர்த்தமுள்ளதாக ஏற்கவேண்டியதில்லை. காலநிலையில் 10% முன்னேற்றம் காலநிலை மாற்றங்களினால் ஆனதெனக் கொள்ளினும் கொலை, தற்கொலை, வீதி விபத்து ஆகியன 50% விழுக்காட்டைக் காட்டுவது பிரார்த்தனையின் சக்தியே என முடிந்த

முடிவாக ஏற்றுக் கொள்ளலாம். இதனால், வைதீக மதங்கள் கடைப் பிடிக்கும் அர்த்தமற்ற, பலனற்ற, மீண்டும் மீண்டும் கூறிய கூறல் முறையை நான் வெல்லவில்லை. ஆனால் மிக அனுபவம் வாய்ந்தவர்கள் கூர்ந்த மன ஒருமைப்பாட்டுடன் செய்யும் தியானத்தையே குறிப்பிடுகின்றேன்.

இந்த ஆராய்ச்சியில் ஈடுபட்ட திரு. வால்டர் சிம்மர்மன் மேற்கண்டவாறு சொல்கிறார். "பலன் எவ்வாறிருக்கும் என்பதை நாங்கள் அறிந்திருக்கவில்லை. மனித மனதிற்கு அளவிறந்த சக்தி உண்டு என்பதை இப்பரிசோதனை முடிந்த முடிவாகக் காட்டுகிறது. நாட்டின் ஒவ்வொருவருடைய வாழ்க்கையிலும் ஆச்சரிய காரணமான நன்மாற்றங்கள் ஏற்பட்டதை இது காட்டுகிறது. இம்மாநிலத்தின் வாழ்முறையை தியானத்தின் மூலமாக மட்டுமே நாம் விருத்தி செய்தோம். ஒரு இனிய இசைவை நாங்கள் உருவாக்கியுள்ளோம்".

றோட் தீவின் சுகாதார உதவிப் பணிப்பாளர் திரு. ஜோன் ரியர்ணி சொல்வதைக் கேளுங்கள். "இந்த விபரங்கள் ஆச்சரியகரமானவை. இந்தக் குறிப்படத்தக்க வீழ்ச்சிக்கு தியானத்தின் தாக்கத்தைத் தவிர வேறு எந்த விளக்கத்தையும் என்னால் நினைக்க முடியவில்லை".

றோட் தீவின் சுகாதாரத் திணைக்களத்தில் தரவு மதிப்பீட்டு அலுவலகத் தலைவர் கலாநிதி அலெக்ஸ் பர்கீஸ் சொல்கிறார் "தியானத்தின் பயனால் ஏற்படும் தளர்வு நிலையினால் சில முக்கிய தாக்கங்கள் ஏற்படுகின்றன என்பதை நான் நன்றாக அறிவேன்". நியூயோர்க் பல்கலைக்கழகத்தில் புள்ளிவிபரவியலாரும் சந்தைப்படுத்தல் பற்றிய பேராசிரியருமாகிய கலாநிதி றொனால்ட் கற்றி சொல்கிறார் "புள்ளிவிபரவியலாளன் என்ற முறையில் நான் மிகவும் கவரப்பட்டுள்ளேன். மாநிலத்தில் கொலை, தற்கொலை வீதிவிபத்து என்பவற்றில் ஏற்பட்டுள்ள ஆச்சரிய கரமான வீழ்ச்சிக்கும் றோட் தீவில் நடந்த பரீட்சார்த்த தியானத்திற்குமிடையே தொடர்பு உண்டென்பது நிச்சயமாகத் தெரிகிறது. நான் ஒரு விஞ்ஞானி என்ற முறையில்தான் பேசுகிறேன். தியானத்தில் அதீத அக்கறை உள்ளவனாக அல்ல".

பிறின்ஸ்ரன் பல்கலைக்கழகத்தில் உளவியல் விரிவுரையாளரான கலாநிதி கறிங்ரன் சொல்வதையும் இறுதியாகக் கேட்போம். "தியானம் மக்களிடையே அதீத அமைதித் தாக்கத்தை ஏற்படுத்துகிறது. தியானத்தினால் ஏற்படும் சக்தி அளவிறந்தது. அதனால் அது ஏற்படுத்தும் அமைதியும் மென்மையான உணர்வுகளும் மற்றையோரிடமும் தொற்றிக் கொள்கிறது. வைத்தியர்களும் இப்போது இதை முக்கியமானதாகக் கருதுகிறார்கள்".

தற்கால அமெரிக்காவில் முதல் முறையாக விஞ்ஞான அடிப்படையில் இப்படியான ஒரு பரிசோதனை நடந்திருக்கிறது நல்லெண்ணமுடைய ஆண் பெண் பாலாரிடையே தங்களுடைய தியானத்தினால் ஏற்படும் மனோசக்தியை நன்மையான தாக்கத்தை ஏற்படுத்துவதற்கு இது தூண்டுகோலாக அமைய வேண்டும். இந்த முந்நூறு பேரையும் வழிகாட்டியாகக் கொண்டு உலகிலே உள்ள நாநூறு கோடி மக்களும் பின்பற்ற முடியுமானால் ஏற்படக்கூடிய நன்மையினைக் கற்பனை செய்து பாருங்கள். துன்பமே சூழ்ந்த எங்கள் உலகத்தை அரைநூற்றாண்டு காலத்தினுள் ஒரு சொர்க்க பூமியாக மாற்றமுடியும். உள்ளொளியை எங்கும் பரப்பமுயன்று போதிய பலனைப் பெறாததினால் வாடும் "வழிகாட்டும் தீபம்"களாகத் திகழும் சிறிய குழுவினருக்கு இப்பரிசோதனை உற்சாகமூட்டுவதாக அமையவேண்டும். "எங்களிற் பலர் நினைப்பதைப்

போலல்லாமல் இப்படியானவர்கள் உலகெங்கும் வாழ்கின்றார்கள்".

இருள் சூழ்ந்து, தீய செய்திகளும், எதிர்மறையான எண்ணங் களும் அதிகரித்துள்ள இவ்வேளையில் உள்ளொளி பரப்பவேண்டியதன் அவசி யத்தை சமீபத்தில் சாயிபாபா உறுதிப் படுத்தியுள்ளார்.

இதன் அவசியத்தை அதிகம் வற்புறுத்திச் சொல்லவேண்டிய தில்லை, வயோதிபர்களும், நகரமுடியா தவர்களும் கூட இதை அப்பியசிக்க முடியும்.

**சனாதன சாரதி (ஆங்கிலம்)**
**ஏப்பிரல் 1985**

**குறிப்பு:** இக்கட்டுரையின் அடிப்படையிலேயே வடபிராந்திய சாயி நிலையங்களில் வருடாந்தம் 45 நாள் சாதனை நடைபெற்று வருகிறது. இவ்வருடமும் அக்டோபர் 9ம் திகதி தொடக்கம் நவம்பர் 22ந் திகதி வரை மாலை 7.30 மணி தொடக்கம் 8.00 மணி வரை அமைதிப்பிரார்த்தனை நடைபெறும். மாலை 7.30 முதல் 7.50 வரை 'காயத்திரி ஜெபம்', 10 நிமிடம் தியானம் (7.50 – 8.00 மணி வரை).

எமது வீடுகளில் இருந்தவாறே குறிப்பிட்ட நேரத்தில் ஒரே முறையில் அனைவரும் பிரார்த்தனை செய்து நாட்டில் அமைதியை ஏற்படுத்துவோமாக. ஒரே நேரத்தில் இணைந்து பிரார்த்திப்பது முக்கியம்.

– ஆன்மீக இணைப்பாளர் –
வடபிராந்தியம்.

## முன்மாதிரியாக நடவுங்கள்

**பகவான் ஸ்ரீ சத்திய சாயி பாபா பாலவிகாஷ் குருமாருக்கு ஆற்றிய உரை**
**பாலவிகாஷ் பயிற்சி முகாம் ' 1978**

பாலவிகாஸ் குருமார் முன் மாதிரியான(எடுத்துக்காட்டான) நடத்தை கொண்டவர்களாய், சுயநலமற்று, உலகியல் பொருள்களில் அளவு மீறிய பற்றில்லாதவர்களாய் விளங்கவேண்டும். இதுதான் சரியான மார்க்கமாகும். இது உங்களுக்குச் சாயியின் போதனை யாகும்.

பிரம்மா உலகத்தைப் படைக் கிறார். விஷ்ணு உலகத்தைக் காக்கி றார். பரமசிவன் உலகிலுள்ள தீமை களை அழித்து அதைப் புனிதப்படுத்து கிறார். குருமார் படைத்தல், காத்தல், தீயன களைதல் என்னும் இம்மூன்று தொழில்களையும் செய்ய வேண்டும். குரு குழந்தையின் மனதிலும், இதயத் திலும் நல்லெண்ணங்களைப் பதிய வைக்கவேண்டும். (குருவான) அவனோ அல்லது அவனோ விதைக்கப்பட்ட எண்ணங்களைப் போஷித்து உறுதி யாக வளரும் வண்ணம் காக்க வேண்டும். (குருவான) அவளோ அல்லது அவனோ குழந்தையின் மனதிலிருந்து தீய, ஆரோக்கியமற்ற, நலமில்லாத எண்ணங்களையும் மனோ பாவங்களையும் களைந்தெறிய வேண் டும். எல்லாத் தொழில்களிலும் ஆசிரி

யர்களுடைய தொழில் மிகப்பொறுப்புடையது. ஆசிரியர்கள் இன்றைய இளம் மக்களை உருவாக்கினால்தான், அவர்கள் எதிர்காலத்தின் யோக்கியமுள்ள குடிமக்களாக, மேன்மையாக வளர்வர். இப்பொழுது உங்கள் கவனத்திற்கு கீழுள்ள குழந்தைகளுக்கு நீங்கள் எப்படி உங்கள் கடமையைச் செய்கிறீர்கள் என்பதைப் பொறுத்து நாட்டின் எதிர்காலம் இருக்கிறது. ஆசிரியர்களே உண்மை முதலிய சகஜ நீதிகளைக் கடைப் பிடிக்கவில்லை என்றால், அவர்கள் குழந்தைகளிடம் எப்படி நல்ல பழக்கங்களையும் குணங்களையும் பதிய வைக்கமுடியும்? தாம் பெரியோர்களிடம் என்ன பார்க்கிறார்களோ, அதை உட்கிரகித்துக் கடைப்பிடிக்கும் பெரிய மனப்பான்மை குழந்தைகளுக்குண்டு. ஆகவே, பெரியோர்களின் நடத்தை இளம் பிஞ்சு மனங்களில் பெருமளவுக்கு பல விளைவுகளை உண்டாக்க வல்ல செல்வாக்கு உடையது. ஆகவே, குருமார் தங்கள் சொந்த நடத்தையைப்பற்றி மிகவும் கவனத்துடனிருக்க வேண்டும். இல்லாவிட்டால், இதை உங்களிடமிருந்துதான் கற்றுக் கொண்டோம், நீங்கள்தான் இதைக் கற்பித்தீர்கள்! என்ற பழிச்சொல்லை உங்கள் மாணவர்களிடமிருந்தே நீங்கள் கேட்க நேரிடலாம்.

குழந்தைகளுடைய மனங்களின் பால் பெற்றோர்களுக்குள்ள செல்வாக்கு எவ்வகையிலும் முக்கியத்துவம் குறைந்ததன்று. அது குழந்தைகளின் ஆளுமைத்தன்மையையும், பொலிவினையும், நடத்தை முறைகளையும் பெருமளவுக்குத் தீர்மானிக்கும் முதன்மையான அம்சமாகும்.

இளம் குழந்தைகளின் மனங்கள் எளிதில் பாதிக்கப்படுவதை நுட்ப உணர்ச்சிக்கு வசப்படுபவை. அவர்களுடைய இளம் மனங்களில்மோதும் எண்ணங்கள் அனைத்தும் அவர்களது நற்குணத்திலும். அனைத்து நடத்தை முறைகளிலும் ஆழ்ந்ததொரு விளைவை உண்டாக்குகின்றன. இளம் மாணவனொருவன், சிரவணகுமாரின் கதையில், அவனது ஆழ்ந்த அன்பு, பக்தி, கண்ணிழந்த தன்பெற்றோரிடம் கொண்ட பக்திபூர்வமான தொண்டு இவற்றைப்பற்றிக் கேட்டறிந்தான். கதையிலிருந்த சோகம் பையனுடைய இதயத்தை மிகமிக நெகிழ்த்தியது. பெற்றோர்களிடம் சிரவணகுமார் கொண்ட அன்பு பையனுடைய வாழ்க்கைக்கு ஓர் உதாரணமாக விளங்கியது. தன் பெற்றோர்களுக்குப் பக்தியுடனும். சுயநலமற்ற அன்புடனும் தொண்டு செய்வதில் சிரவணகுமாரை ஆர்வத்துடன் பின்பற்றப் பெருமுயற்சி செய்ய வேண்டும் எனப் பையன் தீர்மானித்தான். இன்னொருநாள், அவன் ஸத்ய அரிச்சந்திரன் நாடகத்தைப் பார்க்கச் சென்றான். ஸத்ய அரிச்சந்திரனுடைய மனவுறுதி முன்னுதாரணமாக அமைந்து, எது எப்படி ஏற்பட்டாலும் சரி, உண்மைகளைக் கடைப்பிடிப்பதிலிருந்து சிறிதும் வழுவ மாட்டேன் என்று பையன் தீர்மானிக்குமளவுக்கு அவனுடைய இளம் மனதில் ஆழ்ந்ததொரு பதிவை உண்டாக்கியது. பறவையின் இருமருங்கு சிறகுகள் போல், இரதத்தின் இரு சக்கரங்கள் போல் உதவி நின்ற இந்த இரண்டு உறுதி முடிவுகளால் அந்தப் பையன் தன் வாழ்வில் நிறைவு நிலையை அடைய முடிந்தது. சாதாரண பையனாகவிருந்த மோஹன் தாஸ்காந்தி மஹாத்மா காந்தியாகப் பரினமித்தான். துரதிஷ்டவசமாக, சிரவணகுமாரின் வரலாறு போன்ற புதிய கதைகள் இன்றைய குழந்தைகளுக்குக் கற்பிக்கப்படுவதில்லை. ஸத்திய அரிச்சந்திர நாடகம் போன்ற மேன்மைப்படுத்தும் நாடகங்களை அவர்கள் பார்க்கும்படி நடிக்கச் செய்வதில்லை. அவர்கள் படிக்கும், அல்லது பார்க்கும் திரைப்படங்கள் இளம் மனங்களைக் களங்கப்படுத்த மட்டும் உதவி செய்கின்றன.

பாலவிகாஸ் குருமார் இந்தப் போக்கை மாற்ற வேண்டும். அவர்கள் இந்தியாவின் மாபெரும் முனிவர்கள், யோகிகள், புனிதமான தெய்வீக மக்கள் இவர்கள் வாழ்க்கை வரலாறு களை இளம் பிள்ளைகளுக்குக் கற்பிக்க வேண்டும். குழந்தைகளின் மனங்கள், படரும் கொடிகளைப் போன்றவை, நாம் விரும்பும் எந்தத் திசையிலும் அவர்களைத் திருப்பி வளரவவைக்க முடியும். வளைந்து கோணலாக வளரும் கிளைகளை வெட்டிவிட்டு, பூச்சிபிடித்த இலைகளை நாம் பிடுங்கி எறிவதில்லையா? அதுபோலவே இளம் மக்களின் எல்லாத் தீய மனப்பான்மைகளையும் கிள்ளியெறிந்துவிட்டு, நல்ல குணங்க ளையும் சரியான மனப்பான்மைகளை யும் நாம் பதிய வைக்க வேண்டும். இது குரு கற்பித்தலால் மட்டுமே சாத்திமாவதோடு, மேலும், அநுஷ்டி த்துக் காட்டுவதால் சிறப்பாகச் சாத்தியமாகும். ஆசிரியர்கள் அநுஷ் டானமாக இதைக் கடைப்பிடித்தா லொழிய அவர்களது போதனை சக்தி வாய்ந்ததாக இருக்காது. நன்மை அளிக்கும் விதத்தில் அவர்கள் குழந்தைகளைச் சீர் திருத்த முடியாது. சில ஆசிரியர்கள் குழந்தைகளைக் கெடுக்கவும் செய்கின்றனர். அவர்கள் குழந்தைகளை தீமை செய்வதற்கு இட்டுச் செல்கின்றனர். ஒரு ஆசிரியர் காந்தியைத் தவறானதொரு செயலைச் செய்யும்படி வழிகாட்ட முயன்றார். காந்தி அதை மறுத்து ஆசிரியர் போக்கை எச்சரித்தார். ஆசிரியர் தம் தவறுதலை உணர்ந்து தம் தவறு க்காக வருந்தினார்.

இன்று மாணவர்களின் ஒழுக்க மும் நடத்தையும் எல்லா வரம்புகளை யும் கடந்துகொண்டு வருகின்றன. இவ்விதமான நிலைகள் தொடர்ந்தால், நாடு நாசத்தை நோக்கிச் செல்லும். பெற்றோர்களும் குருமாரும் இந்த வருந்தத்தக்க நிலையைத் தடுத்து மாணவர்களிடையே கட்டுப்பாட்டைக் கொண்டுவர பெருமுயற்சி செய்ய வேண்டும். குழந்தைகளின் எதிர் காலம், நாட்டின் எதிர்காலம். இவற்றை அவர்கள் பாதுகாக்க வேண்டும். குருமாரான நீங்கள் இந்தப்பணியைத் தைரியமாகவும் தீர்க்கமான உறுதியோடும் ஏற்றுக் கொள்ள வேண்டும். இது உங்களு க்கு நேரிடையாகத் தீர்வு காண வேண்டியதும், முழுமையாக உள்ளதும், புனிதமானதும், அவசரமானதுமான பொறுப்பாகும்.

இக்காலத்தில் ஆண்களைவிடப் பெண்கள் அதிகமாக வேலைக்குப் போகின்றனர். ஆனால், ஒரு தாயாரு டைய புனிதமான முதல் கடமையாகிய குழந்தைகளை நன்கு வளர்க்க அவர்களால் முடியவில்லையென்றால், அவர்கள் சம்பாதிக்கும் பணத்தால் என்ன பயன்? ஆசிரியைகளாகப் பணிபுரியும் சில தாய்மார்கள் மற்றவர் களது குழந்தைகளைக் கவனித்துக் கொள்கின்றனர். ஆனால் தம் குழந்தை களைக் கவனிக்க அவர்களுக்கு நேர மிருப்பதில்லை. அவர்கள் தம் குழந்தைகளைப் புறக்கணித்து விடுகி ன்றனர். ஆதலால் படிப்பு நல்லொ முக்கம் இவை இரண்டிலும் அவர்களது குழந்தைகள் கெட்டுப் போகின்றனர். மற்றக் குழந்தைகளைக் கவனிக்க முயற்சி செய்வதற்கு முன்பு, தம் சொந்தக் குழந்தைகளை முதலில் கவனித்து அவர்களைச் சரியான வழியில் வளர்ப்பது ஒரு தாயாரின் தலையாய கடமையாகும். முதலில் அவர்களுடைய சொந்தக் குழந்தைகள் இலட்சியக் குழந்தைகளாக வளர்க் கப்படவேண்டும்.

நல்ல நீதிக் கதைகள், புனித ஸத் தோத்திரங்கள், ஸ்லோகங்கள் கீதையின் அத்தியாயங்கள் முதலிய வற்றை நீங்கள் குழந்தைகளுக்குக் கற்பிக்க வேண்டும். கடவுள் பக்தி, பாவபயம், பெரியோர்களிடம் மதிப்பு, பெற்றோர்களுக்குக் கீழ்படிதல், உண்மையைக் கடைப்பிடித்தல் முதலிய வாழ்வின் நற்குணங்களை

அவர்கள் மனங்களில் நீங்கள் நன்கு பதிய வைக்க வேண்டும். ஆரோக்கியப் பழக்கங்களைப் பண்புற வளர்த்துக் கொள்ள அவர்களுக்குக் கற்றுக்கொடுக்க வேண்டும். ஆரோக்கிய, சுகாதார அடிப்படைக் கொள்கைகளையும், அவற்றின் முக்கியத்துவத்தையும், குழந்தைகள் அறியும்படி செய்ய வேண்டும்.

அதிகாலையிலேயே விழித்து எழும் பழக்கத்தைக் குழந்தைகள் முதலில் பெற்றுப் பின் வளர்க்கும்படி செய்ய வேண்டும். அதிகாலையில் சேவல் கூவும் போது குழந்தைகள் விழித்தெழ வேண்டும். பிறகு அவன் இறைவனைப் பிரார்த்தித்துத் தன் காலைக் கடமைகளை முடித்தக் குளித்துத் தன் காலை உணவை உண்ண வேண்டும். பின்பு, வீட்டில் செய்து வரும்படி குறித்த பள்ளிக்கூட பாடங்களைப் படிக்க வேண்டும். பின்னர் பள்ளிக்குச் செல்ல வேண்டும். அங்கு அவன் நன்கு படித்து வல்லவனாக வேண்டும். இத்தகைய நன்மை பயக்கின்ற சுத்தமான நல்ல பழக்கங்கள் பண்படுத்தி வளரும்படி குழந்தைகளைப் பயிற்றுவிக்க வேண்டும். ஆனால், இன்று துரதிஷ்டவசமான சூழ்நிலை என்னவெனில், பெற்றோர்களே காலையில் ஒன்பது மணிக்கு முன்பு படுக்கையிலிருந்து எழுந்திருப்பதில்லை. ஒழுக்கக்கேடான திரைப்படங்களைப் பார்த்துவிட்டு, அல்லது குடித்துக் கூத்தடிக்கும் இராக் "கிளப்"பில் காலத்தை வீணடித்து விட்டு, இரவு நேரங்கழித்து (தாமதமாக) வீட்டுக்கு வருகின்றனர். இன்னும் சில பெற்றோர்கள் தம் குழந்தைகளும் புகைப்பிடிக்க வேண்டும், குடிக்க வேண்டும் எனப் பழக்க விரும்புகிறார்கள், பெற்றோர்கள் இதில் பெருமையடைகின்றனர். ஏனெனில், அத்தகைய வாழ்வே நாகரீகம் என்பது அவர்கள் எண்ணம். நமது பாலவிகாஸ் மூலமாகப் பெற்றோர்களிடையேயும், மக்களிடையேயும் இத்தகைய தீய நச்சுப் பழக்கங்களைப் பரவவிடாமல் களைவதற்கு நீங்கள் முயல வேண்டும்.

மேலும், குழந்தைகள் ஒருவருக்கொருவர் சிநேகத்துடனும், சகோதர உணர்வுடனும் வளரும்படி பார்த்துக் கொள்வதற்கு நீங்கள் முயலவேண்டும். பணக்காரர்களின் குழந்தைகள் அகங்காரத்தையும், படாடோபத்தையும் வெளிக்காட்டி, ஊதாரித்தனமாக அதிகமாகச் செலவு செய்யும் மனப்பான்மையுடையவர்களாய் இருப்பர். உண்மையில், தேவைப்படுவதற்கு அதிகமாகவே அவர்களுக்குப் பணம் கொடுத்து அவர்களின் பெற்றோர்கள் செல்லம் கொடுத்து சலுகை காட்டுவர். உண்மையில் ஒன்பது ரூபாய் போதுமானபோது, அவர்கள் தம் குழந்தைக்கு இருபது ரூபாய் கொடுப்பர். இதனைக் கண்ட ஏழைக் குழந்தைகள் தாழ்வு மனப்பான்மை கொள்ள, அதனால் தங்கள் பணக்கார வகுப்பு நண்பர்களுடன் வெறுப்பு பகைமை உணர்வுகளை வளர்க்க வழியேற்படுகின்றது. குழந்தைகள் தம் வகுப்பு நண்பர்களிடமும் மற்றவர்களிடமும் சமத்துவ உணர்வு ஒன்றிய மனப்பான்மை, நட்புறவு இவற்றை பண்புற வளர உதவுவது குருமாரின் முக்கிய கடமையாகும். அவர்கள் ஒருவருக்கொருவர் பரஸ்பர அன்பைப் பெற்றுத் திகழும்படி செய்ய வேண்டும்.

குருமார் மற்றோர் அம்சத்தையும் கவனிக்க வேண்டும். மாணவர்கள் தமது வகுப்பறையில் நன்கு நடந்து கொள்ளலாம், ஆனால் அவர்கள் வகுப்புக்கு வெளியே சென்றவுடனேயே எப்படி நடந்து கொள்கின்றனர். வெளியேயும் வீட்டிலும் அவர்கள் நடத்தை எப்படி உள்ளது, பள்ளியிலும் அவர்கள் நண்பர்களிடமும் எப்படி நடந்து கொள்கின்றனர். உங்கள் பாலவிகாஸ் குழந்தைகளின் நடத்தை உங்கள் வகுப்பில்மட்டுமன்றி அவர்கள் வீட்டிலும், வெளியுலகிலும், நண்பர்களிடமும் முன்மாதிரியாக, ஒரு

ஒளிவிளக்காக இருக்க வேண்டும். நீங்கள் அவ்வப்போது தக்ககாலங்களில் பெற்றோர்கள் தினத்தைக் கொண்டாடுவதன் மூலம் பெற்றோர்களை வரவழைத்து, பாலவிகாஸ் வகுப்புகள் நடத்துவதாலாகும் நன்மை தம் குழந்தைகளின் நற்குணத்திலும் நடத்தையிலும் எப்படிப் பிரதிபலிக்கிறது என்ற மதிப்பீட்டை அவர்கள் வாயினாலேயே வெளிப்படையாகப் பேச வாய்ப்பளிக்க வேண்டும்.

நீங்கள் கொடுக்கும் அறநெறிப்பட்ட ஆன்மீக போதனைகளுடன் குழந்தைகள் நல்லபொது அறிவைப் பெறும்படியும், அதிமுக்கியமாகத் தம் பள்ளிக்கூடப் பாடங்களை நன்கு படித்துத் தேறும்படியும் நீங்கள் பார்த்துக் கொள்ளவேண்டும்.

குழந்தைகள் மிகவும் இன்றியமையாதனவாகிய ஆன்மீக மனப்பான்மைகளையும் குணங்களையும் உட்கிரகித்துக் கொள்ளவேண்டும். சினிமா மோகம் போன்ற தீய பழக்கங்களைக் குழந்தைகள் வெறுத்து விலகும்படி நீங்கள் செய்ய வேண்டும். தற்காலத்தைய திரைப்படங்களும், நாடகங்களும் இளம் மனங்களைக் கறைப்படுத்திப் பாழாக்குகின்றன. தாம் ஏன் திரைப்படங்களுக்குப் போகக்கூடாது என்று குழந்தைகள் உங்களைக் கேள்விகேட்கும். அவர்கள் மனதில் தற்காலத்தைய திரைப்படங்கள் உண்டாக்கும் தீய நஞ்சுபோன்ற விளைவுகளைப் பதியும்படி சொல்லி நம்பிக்கை ஏற்படும்படி நீங்கள் செவ்வனே விளக்க வேண்டும். குழந்தைகள் சரியான தூய உடையணியும் பழக்கங்களைக் கொண்டிருக்க வேண்டும். அவர்கள் ஆடை பகட்டாகவும், படாடோபமுடையதாகவும் இருக்கக்கூடாது. அவர்களுக்குச் சிக்கனம், வரவுக்குத்தக்க செலவு முதலிய நல்ல பழக்கவழக்கங்களைக் கற்பிக்க வேண்டும்.

தாம் கற்கும் கல்வியின் குறிக்கோளை அவர்கள் மனங்களில் பதிய வைக்க வேண்டும். இன்றைய பள்ளிக்கல்வி ஆழமற்றது புள்ளிக்கு தவாது. அது நற்குண வளர்ச்சியில் நாட்டமில்லாதது. கல்வி மனிதனை மேன்மைப்படுத்த வேண்டும். ஆனால், அதற்குப் பதில் அவனை கீழ்மைப் படுத்துகிறது. இளம் சிறார்களை வைரங்களாக வடிப்பதற்குப் பதிலாக அவர்களைக் கரியாக்கிக் கொண்டிருக்கிறது. அது அவர்களைத் திருத்தி நல்லபடியாக்குவதில்லை. அவர்களுக்கு ஞானம் நல்குவதில்லை.

வாழ்க்கை என்பது நீர்க்குமிழி போன்றது. அது எந்தநேரத்திலும் முடிந்துவிடலாம். உடல்தூக்கி எறியப்பட்டு எரிக்கப்படும். அத்தகைய துரதிஸ்ட நாளுக்கு முன்பு ஒருவன் வாழ்வின் குறிக்கோளைச் சாதிக்க வேண்டும். வாழ்க்கை என்பது புலன் அனுபவத்திற்காக அன்று ஒருவனை இறப்பு அடித்து வீழ்த்துவதற்கு முன்பு சாதிக்க வேண்டிய ஆன்மீக குறிக்கோளுடையது வாழ்க்கை.

நீங்கள் இளம் மனங்களில் ஆன்மீக விதைகளை விதைக்க வேண்டும். அவைகள் உயர்ந்து வளரும்படி அவற்றை நீங்கள் காக்க வேண்டும். அவர்கள் மனங்களிலுள்ள தீய மனப்பாங்கையும் பழக்கவழக்கங்களையும் களைந்து புனிதமான மேன்மையான எண்ணங்களையும் இலட்சியங்களையும் பதியவைக்க வேண்டும். குழந்தைகள் இலட்சிய மனிதர்களாக உயர்ந்தோங்கி வளர வேண்டும். இது நீங்கள் நிறைவேற்ற வேண்டிய எல்லாவற்றிலும் மிகப் புனிதமான பொறுப்புள்ள பணியாகும். நீங்கள் அந்தப் பணியை முழு அக்கறையுடனும் தியாக சிந்தை யோடும் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

அடுத்த இதழ்
ஹட்டன் விசேட இதழ்

# உயர்நிலைமாற்றத்திற்கான தகவல்

**(திரு. A.K. நேசரட்ணம் - தலைவர், மத்திய அறக்கட்டளை நிதியம்)**

மேம்பாடுகள் அற்ற வாழ்க்கை அர்த்தமற்றது. மக்களின் இப்படியான வாழ்க்கை நிலையின் அதிகரிப்பினாலேயே இன்று உலகம் அல்லல்படுகிறது. மனித உரிமை மீறல், பெண் இனம், சிறுபிள்ளைகள் துஷ்பிரயோகம் மனிதனை மனிதன் சுரண்டுதல் போன்ற சம்பவங்கள் பெருகி வருகின்றன.

இவ்வாறான பயங்கரமான சம்பவங்கள் முற்றுப்பெற வேண்டுமானால் மனிதரின் உள்ளத்திலும் இருதயங்களிலும் பாரிய உயர்நிலை மாற்றம் ஏற்படவேண்டும். சுவாமி தனது அவதாரத்தை வெளிப்படுத்திய 1940 ஆம் ஆண்டிலிருந்தே உயர்நிலை மாற்றத்தை பூர்த்தியாக்க உழைத்து வருகிறார். சுவாமி எதற்காக இப்புவியில் அவதரித்தாரோ அக்கைங்காரியத்தை பூரணப்படுத்த இன்னும் இரு தசாப்தங்கள் எம் மத்தியில் வாழ்வார். அவர் இப்பொற்காலத்தில் அன்பும் வாய்மையும் பெருக வேண்டுமென விரும்புகிறார். அவர் இக்கைங்காரியத்தை எமது உதவியின்றி செய்யலாம். ஆனால் அவர் இச்சந்தர்ப்பத்தை பயன்படுத்தி நாம் எவ்வளவு தூரத்திற்கு தெய்வீகத்தில் உயரமுடியுமோ அவ்வளவு தூரத்திற்கு உயர எமக்கு அனுசரணையாக உள்ளார். எனவே நாம் எல்லோரும் ஒரு தீர்க்கமான முடிவை இன்றே எடுத்து விசுவாசமாக அன்பையும் வாய்மையையும் எமது நாளாந்த வாழ்வில் எமது சகாக்கள் மிருகங்கள் பட்சிகள் மீதும் கடவுள் மீதும் சொரிய முன்வரவேண்டும்.

1999ஆம் ஆண்டு அக்டோபர் பகவான் தான் வழமையாக வழங்கும் தசரா சொற்பொழிவை வழங்க மறுத்துவிட்டார். இது அவரின் சொற்பொழிவை கேட்க வந்திருந்த மக்கள் மத்தியில் பெரிய ஏமாற்றத்தையும் தடுமாற்றத்தையும் ஏற்படுத்திவிட்டது. அவர் ஏன் பேசமறுத்தார் எனக் கேட்டபொழுது (பகவான் கூறியதை நான் சொல்கிறேன்) "சுவாமி கடந்த 50 ஆண்டுகளாகச் சொற்பொழிவாற்றுகிறார் ஆனால் அவர் கூறிய சிலவற்றை யாவது நடைமுறைப்படுத்த நீங்கள் முற்படவில்லை. உங்களில் எனது பேச்சினால் ஒரு குறிப்பிடத்தக்க மாற்றத்தையும் காணாததினால் நான் தொடர்ந்து பேசுவதில் அர்த்தம் இல்லை என எண்ணுகிறேன்" என்றார். "நீங்கள் என்னத்தைப்பற்றி நான் பேச வேண்டுமென எதிர்பார்க்கிறீர்கள்? என்னுடைய போதனைகள் யாவும் வீணாய்ப் போய்விட்டதே எனப் பார்க்கும் போது அது எனக்கு கவலை அளிக்கிறது". அதன் பின்பு பல தூண்டுதலின்பேரில் சுவாமி தனது பக்தர்கள் உண்மையாகத் தமது தவறுதலுக்கு வருந்துகிறார்கள் என உணர்ந்து கருணாமூர்த்தியான தேவன் பேசுவதற்கு உடன்பட்டார். நாம் ஒன்றை உணரவேண்டும். நாம் சுவாமியின் கோட்பாடுகளையும் கட்டளைகளையும் கடைப்பிடிக்காமல் விடும் பொழுது அவை சுவாமிக்கு வேதனையை ஏற்படுத்துகிறது. அதுமட்டுமல்ல நாம் அவரைச் சித்திரவதை செய்கிறோம்.

சுவாமி கடந்த 60 ஆண்டுகளாக எங்களை "பிரேமசொரூபிகளே! திவ்விய ஆத்ம சொரூபிகளே!! என அன்புடன் அழைக்கிறார். ஆனால் நாம் உண்மையாக அவ்வழைப்புகளுக்குத் தகுதியானவர்களா?

எங்களில் எவ்வளவு கோபம், குரோதம் வெறுப்பு பதிந்துள்ளன? சகோதரர் ஜெகதீசன் சொன்னார் "நாங்கள் ஒரு நபரைக் கூட வெறுத்தாலும் நாம் கடவுளை நேசிக்கிறோம் எனச் சொல்லமுடியாது. ஏனெனில் எந்த ஒரு மனிதனிலும் கடவுள் உள்ளார். நாங்கள் எங்களை திவ்விய ஆத்மாக்கள் எனக் கூறமுடியாது. நாம் தெய்வீகத்திலிருந்து விடுபட்டு நிற்கிறோம்.

நாம் இன்று ஒரு இக்கட்டான நிலையில் வாழ்கின்றோம். சுவாமிக்கு தனது அவதார நோக்கை பூர்த்தியாக்க இன்னும் 20 ஆண்டுகள்தான் இருக்கின்றன. நாங்கள் ஒரு அடியேனும் முன்னுக்குக் காலடி எடுத்து வைக்கவில்லை. சுவாமி அடிக்கடி கூறுவார் சொல்லிலும் செயலிலும் எண்ணத்திலும் உறுதிப்பாடு வேண்டும். நாங்கள் இக்குணங்களைப் பெற்றுள்ளோம் என உண்மையாகக் கூறமுடியுமா? எங்கள் எண்ணம், சொல், செயலில் வேறுபாடுகள் இல்லையெனக் கூறமுடியுமா? நாங்கள் நேர்மையைக் கடைப்பிடிப்பதுடன் இதன் அடிப்படையில் எங்களை நாம் திருத்திக்கொள்ள வேண்டும்.

நாங்கள் நிச்சயமாகப் பாக்கியசாலிகள்.ஒரு அவதாரத்தின் காலத்தில் நாங்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறோம் என்பதை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும். நாம் அந்த அவதார புருஷரால் அவரின் பட்டியில் சேர்க்கப்பட்டு அவரினால் அறிவுறுத்தப்படுவது எவ்வளவு அதிஷ்டம்!. இன்று உலகிலுள்ள 6 பில்லியன் மக்களைக் கொண்ட இவ்வுலகில் சுவாமியால் அழைக்கப்பட்டவர்கள் ஒரு சிறுபகுதியினரே. எனவே எமக்கு கிடைத்த இந்த நல்ல சந்தர்ப்பத்தை பயன்படுத்தி அவரின் போதனைகளை மேற்கொண்டு நாம் எம்மை உயர்நிலைக்கு மாற்றிக் கொள்ள வேண்டும். இதன் வாயிலாக மோட்ஷத்திற்கு இட்டுச் செல்லும் பாதையை அடைவதற்கோ மோட்ஷத்தை அடைவதற்கோ வழிகோல வேண்டும். இதை அடைவதற்கு அவர் எங்களுக்கு உதவத் தயாராக விருக்கிறார். நாங்களும் அவருடன் ஒத்துழைக்கவேண்டும். சுவாமி கேட்கிறார் "உயர்மாற்றத்தை கொண்டு வரமுடியாத தகவலினால் என்ன பயன்?" உயர்மாற்றத்திற்கும் தகவலுக்கும் **(INFORMATION AND TRANSFORMATION)** உள்ள இணைப்பை புரிந்து கொள்வதற்கே நாம் எல்லோரும் இங்கு கூடியுள்ளோம்.

முதலாவதாக நாம் இதுவரை காலமும் சேகரித்துக்கொண்ட தெய்வீக தகவல்களைக் கணக்கெடுக்க வேண்டும். அதன் பின் தெய்வீக உயர் மாற்றத்தை விளங்கிக் கொண்டு அம்மாற்றத்திற்கு ஏற்ப எம்மை நாம் மற்றிக் கொண்டு மற்றவர்களும் இவ் இலக்கை எய்வதற்கு உதவ வேண்டும். உயர்நிலை மாற்றத்திற்கு உரிய தகவலையும் அதன் கருப்பொருளை ஆய்வு செய்வதற்கும் சிந்திப்பதற்கும் எட்டு விடயங்களை 7ஆவது உலக மகாநாட்டின் அமைப்பாளர்கள் வழங்கியுள்ளனர். நாளடைவில் இவ்விடயங்கள் பற்றிய அறிவுமிகு வியாக்கியானங்களை கேட்டு சுவாமியின் போதனைகள் கட்டளைகள் ஆகியனவற்றை அர்ப்பணிப்புடன் பின்பற்றுவதற்கு அவை உதவுகின்றன. நாங்கள் எமது தற்போதைய நிலையை மதிப்பீடு செய்ய வேண்டும் - நாங்கள் எவ்வளவு தூரம் திரிகரண சுத்தியுடன் சுயநல மாற்ற அன்புடனும் சுவாமியின் ஒன்பது போட்பாடுகளையும் பத்துக் கட்டளைகளையும் பின்பற்றுவதில் முன்னேற்றம் கண்டுள்ளோம்? எமக்கு பகவானின் தெய்வீகத்தில் பரிபூரணமான விசுவாசம் உண்டா? அவருடைய போதனைகள் வழிகாட்டல்களை எண்ணம், சொல், செயல் மூலம் பின்பற்றுவதினாலேயே அவருடைய தெய்வீக கருணையைப் பெறலாமென்பதில் எமக்கு நம்பிக்கை உண்டா? சாயி நிறுவனங்களால் நடத்தப்படும்

எல்லா செயல்பாடுகளிலும் நாங்கள் தவறாது பங்குகொள்ள வேண்டுமென் பது அவசியம். இவ்வாறு பங்குகொள் வதால் நாங்கள் எங்களை "உண்மையின் ஊற்றுக்கு" கருவிகளா க்கிக் கொள்கிறோம்.

சாயி பக்தர்கள் கோபம், பேராசை, பொறாமை, ஆகியவற்றை கண்டிப்பாகத்தவிர்த்து தீய வேண்ட த்தகாத பழக்கங்களை விட வேண்டும். சுவாமிக்கு கூடிய கரிசனை "உயர்நிலை மாற்ற"மேயன்றி ஒருவர் தனது நாளாந்த வாழ்வில் அடையும் குறிக்கோளோ பெறுபேறுகளோ அல்ல. சுவாமியின் கருத்துப்படி உயர்நிலை மாற்றம் என்பது "எல்லோரிலும் சாயியைக் காண்பது அல்லது தெய்வீகத்தை காண்பது" ஆகும்.

**Daily News 09.08.2000**
**தமிழாக்கம்:**
**திரு செ. கதிர்காமத்தம்பி – தாவடி.**

# சாந்திக்கு ஒரு சாயி

சாந்திக்கு ஒரு சாயி என்று ஏன் சொல்லுகிறோம்? நாம் சொல்ல வில்லை. அனுபவம் சொல்லுகிறது. சாந்தி, சமாதானம், அமைதி, நிம்மதி என்பன எல்லாம் ஒரு பொருள் தழுவிய பதங்களாகும். சாந்தியைத் தேடினால் சமாதானம், அமைதி,நிம்மதி எல்லாம் தாமாகவே வந்தடைந்துவிடும். அதனால்தான் வேதகோஷங்களின் இறுதியில் சாந்தி, சாந்தி, சாந்திஹி என்று மும்முறை ஒலிக்கப்படுகிறது.

மனிதன் எதைச் செய்தாலும் பலன் கிடைக்கவேண்டும் என்று விரும்புகின்றான். பலன் கிடைக்காத எந்தக் காரியத்தையும் அவன் செய்ய விரும்புவது இல்லை. பால் என்ற பயன் கிடைக்கிறது - அதனால் அவன் மாட்டை வளர்க்கிறான். வீட்டைக் காவல் புரிகிறது – அதனால் அவன் நாயை வளர்க்கிறான். பூ கிடைக்கிறது, பழம் கிடைக்கிறது என்பதால் மரத்தை வளர்க்கிறான். மாட்டையும் நாயையும் வளர்ப்பது போல, அவன் புலியையும் கரடியையும் வளர்ப்பதில்லை. புலிக்கும் கரடிக்கும் தான் 'மனிதவிருந்து' என்ற பயன் கிடைக்கும். பழம் உதவுவதில்லை என்பதால் 'எட்டி' மரத்தை மனிதன் என்றும் வீட்டில் வளர்ப்பதில்லை. பயனில்லாதவற்றை மனிதன் செய்ய விரும்புவதில்லை. இவை எல்லாம் உதாரணங்களாகின்றன.

ஒழுக்கத்தை பேணுங்கள் என்று வள்ளுவன் மனிதனுக்கு புத்தி கூறவிரும்பினார். வெறுமனே ஒழுக்கத் தைக் கடைப்பிடி என்று சொன்னால் அவன் திருப்பி வள்ளுவரை ஒரு கேள்வி கேட்பான்.

'ஒழுக்கத்தை கடைப்பிடிப் பதனால் என்னங்க பயன்? என்று அவன் கேட்டிருப்பான். அதனால் தான் வள்ளுவர் ஒழுக்கத்தை ஓம்பினால் இன்ன பயன் உண்டு என்று வரக்கூடிய பயனையும் சேர்த்துக் குறள் எழுதினார். பலன் இல்லை என்றால் அவன் எதையும் செய்ய மாட்டான் என்பது வள்ளுவருக்கு நன்றாகத் தெரியும். அதனால் - 'ஒழுக்கம் விழுப்பம் தரலால் ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்' என்றார் அவர். விழுப்பம் என்றால் உயர்வு. ஒழுக்க

த்தை கடைப்பிடித்தால் உனக்கு உயர்வு வரும் என்று சொல்லி வைத்தார். இதைப்போலவே பகவான் சாயிபாபாவின் போதனைகளைப் பின்பற்றினால்: அவரை நாம் வழிகாட்டியாக ஏற்று வணங்கினால்; நமக்கு என்ன பலன் கிடைக்கும் என்று எண்ணுவது மனித இயற்கை.

பாபாவை ஏற்றுப் பணிப்பவர்கள் இதற்கு விடை கூறியுள்ளார்கள். அவர்கள் அந்த விடையை எழுந்தமானத்தில் கூறவில்லை. தாமே அனுபவித்துக் கூறினார்கள். ஒரு மனிதனுக்கு அத்தியாவசியமாக வேண்டியவை மூன்று. உடை, உணவு, உறைவிடம். இந்த மூன்றும் கிடைத்து விட்டால் பின்னர் அவனுக்கு தேவைப்படுவது நோயற்ற வாழ்வு. பின்னர் அவன் போகமும் பொருளும் வேண்டும் என்று ஆசைப்படுகின்றான். பொருளாசை அவனைத் தொடர்ந்து வாட்டுகிறது. பொருள் சேர்ந்துவிட்டால் அத்தோடு அவன் மனக்குறை தீர்ந்து விடுவதில்லை.

பொருள் சேர்ந்ததும் கவலை பீடிக்கிறது. சாந்தி, சமாதானம், அமைதி, நிம்மதி எல்லாம் அவனை விட்டு அகல்கிறது. ஆயிரம் கோடி பொருள் இருந்தாலும் நிம்மதி வேண்டும் வாழ்விலே என்று தவியாய் தவிக்கிறான். இந்த நிம்மதி, சாந்தி நிறைந்த வாழ்க்கையை அவன் எங்கே தேடுவான். அவனுக்கு நிம்மதியும் சாந்தியும் மனநிறைவும் கிடைக்க வழியிருக்கிறது. அந்த வழியைத்தான் அனுபவபூர்வமாகக் கூறியுள்ளார்கள் சாயி பக்தர்கள்.

பகவான் சாயியின் தாமரைத் திருவடிகளைச் சரணடையுங்கள்; உங்களைச் சாந்தி தானாகவே வந்தடையும் என்கிறார்கள் அவர்கள். ஆம் துன்பமும், துயரமும், இன்னலும், ஏமாற்றமும் நிறைந்த இந்த உலகில் நிம்மதிக்கு வழியிருக்கிறது. சாந்திக்கு மார்க்கம் இருக்கிறது. அந்த மார்க்கம்தான் சாயி மார்க்கம். அதனால்தான் 'சாந்திக்கு ஒரு சாயி' என்று நாமும் கூறுகிறோம். பரீட்சித்துப் பாருங்கள். பலனை நீங்களே உணர்வீர்கள்.

காலஞ்சென்ற
எஸ். டி. சிவநாயகம் அவர்கள்
முன்னாள் தலைவர்,
ஸ்ரீ சத்திய சாயி சேவா நிலையம்
கொழும்பு மத்தி
வெள்ளிவிழா வெளியீட்டில்

---

**மனத்தின் அடிப்படையில் சாதனை செய்வது பெரிய தவறு**
**ஆத்மாவே அடிப்படை**

உண்மையில் நாம் செய்யும் சாதனைகள் யாவும் மனத்தையே அடிப்படையாகக் கொண்டுள்ளன. இது மிகப்பெரிய தவறாகும். மனத்தின்மீது நாட்டம் கொண்டு செய்யப்படும் ஆத்மீக சாதனைகள் பயனற்றவையே. சாதனை யாவும் ஆத்மாவையே இலட்சியமாகக் கொண்டு செய்யப்பட வேண்டும். மனத்தினாலேயோ, வாக்கினாலேயோ ஆத்மாவைப்பற்றிய உணர்வு பெறமுடியாது. ஒரு திருடனைக் கண்டுபிடிக்க அவனது உதவியையே நாடுவது சரியாகுமா? மனது திருடன் போன்றது. தன்னைத்தானே கட்டுப்படுத்திக் கொள்ளாதது மனம். எப்படி அதைக் கட்டுப்படுத்துவது என்பதே மகத்தான பிரச்சினை. இதற்கு ஒரேவழி நமது பார்வையை அதன்மீது செலுத்துவதைத் தவிர்த்து ஆத்மாவின் மீதே செலுத்த வேண்டும். இதுவே உள்நோக்கிய பார்வை எனப்படும்.

- பாபா -
(த. ச. சா 1987 ஏப்பிரல்)

# செய்திகள்

## திடீர் இடப்பெயர்ச்சியும் சேவைகளும்

மே மாத முற்பகுதியில் திடீரென யாழ்ப்பாணப் பிரதேசத்தில் அசாதாரணநிலை தோன்றி கொழும்புத் துறை, அரியாலை, நாவற்குளி, கைதடி, சாவகச்சேரி, கொடிகாமம், பளைப்பகுதி மக்கள் திடீரென இடம்பெயரவேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டது. இவர்கள் இடம்பெயர்ந்து கொக்குவில், தாவடி, சுதுமலை, மானிப்பாய், வட்டுக்கோட்டை, சங்கானை போன்ற வலிகாமப் பிரதேசத்தில் வந்து தற்காலிகமாகக் குடியேறினர். குருநகர், கொழும்புத்துறை, அரியாலை போன்ற இடங்களில் இருந்து வந்த மக்களின் நிலை பரிதாபத்திற்குரியதாக இருந்தது. கையில் அகப்பட்ட பொருட்களுடன் இரவோடிரவாக வெளியேறவேண்டியிருந்தது. இதே போன்று வடமராட்சிப் பகுதியில் உள்ள பாடசாலைகளிலும் பெருந்தொகையானோர் புகலிடம் தேடி வந்தனர். இச்சந்தர்ப்பத்தில் சாயி நிலையங்கள் எடுத்த முயற்சிகள் பாராட்டுதற்குரியன.

வடமராட்சிப் பகுதியில் இணைப்புக் குழுத்தலைவர் திரு. வே. சேனாதிராஜா அவர்கள் அங்குள்ள சாயி நிலையங்களை உடனடியாக சந்தித்து வேண்டிய உதவிகள் செய்யவேண்டிய அவசியத்தை எடுத்துக் கூறி நடவடிக்கை எடுத்தார். அவதியுற்றுவரும் மக்களுக்கு உடனடியாக வேண்டியது சமைத்த உணவு. இதற்கான ஏற்பாடுகள் நிலையங்கள் மூலம் மேற்கொள்ளப்பட்டு இரண்டு நாட்களுக்கு வழங்கப்பட்டன. அடுத்து உடுப்புகள், தங்குமிட வசதிகள் குடிநீர் ஆகிய எத்தனையோ பிரச்சினைகளுக்கு முகம்கொடுத்து வடமராட்சி சாயி அன்பர்கள் சிறந்த சேவையாற்றினர். மின்சார பொருத்துநர், தச்சுவேலையாள் போன்றோருக்கு ஆயுதங்களை வாங்கிக் கொடுத்து அவர்கள் தம் வேலைகளைத் தொடர உதவிகள் செய்தனர்.

வலிகாமப் பகுதியில் நிலைமை மோசமடைவதை அவதானித்த சாயி நிலைய உறுப்பினர்கள் மானிப்பாய் நிலையத்தில் இணைப்புக்குழுவின் உபதலைவரும், மானிப்பாய் நிலையத் தலைவருமான திரு. இ. வசந்தசேனன் தலைமையில் ஓர் அவசர கூட்டத்தைக் கூட்டினர். இக்கூட்டத்தில் ஆன்மீக இணைப்பாளர் திரு. S. R. சரவணபவன் சேவை இணைப்பாளர் திரு. K. V. சிவநேசன் ஆகியோரும் கலந்துகொண்டனர். சுன்னாகம், ஊரெழு, கோப்பாய், வட்டுக்கோட்டை, சங்கானை, யாழ்ப்பாணம், கொக்குவில்,கோண்டாவில், நல்லூர் ஆகிய நிலையங்களின் பிரதிநிதிகளும் கலந்துகொண்டனர்.மானிப்பாய், சங்கானை போன்ற இடங்களிலுள்ள மக்கள் இடப்பெயர்வால் படும் கஸ்டங்களை திரு. வசந்தசேனன் அவர்கள் எடுத்துக்கூறினார். எல்லா நிலையங்களும் உடனடியாக இந்த மனிதாபிமானப் பணியில் ஈடுபடவேண்டுமெனவும் கேட்டுக்கொண்டார். நிதியுதவி செய்யக்கூடியவர்கள் நிதியுதவி செய்யும்படியும், பாவித்த உடுப்புகள் கொடுக்கக் கூடியவர்கள் கொண்டுவந்து தரும்படியும், உணவுப் பொருட்கள் அவசரமாகத் தேவைப்படுவதாகவும், மற்றும் சமையற் பாத்திரங்கள் தேவையெனவும் கேட்டுக் கொண்டார். சகல நிலையங்களின் இளைஞர் அமைப்புக்களை இத்தொண்டில் தீவிரமாக ஈடுபடும்படி கேட்டுக் கொண்டார்.

இவ்வேண்டுகோளை ஏற்று இளைஞர் பிரிவினர் ஏராளமான உடுப்புகளைச் சேகரித்து மானிப்பாய் நிலையத்தில் சேமித்து வைத்துத் தேவையானோருக்கு வழங்கப்பட்டது. அரிசி, ஜீவாகாரம், குழந்தைகள் பால்மா, பாய், சமையற் பாத்திரங்கள், முதலிய அத்தியாவசியப் பொருட்கள் இடம்பெயர்ந்தோருக்கு வழங்கப்பட்டன. இச்சேவையில் சாயி நிலையங்களின் இளைஞர் பிரிவினர் தீவிரமாகச் செயற்பட்டனர்.

இன, மத வேறுபாடின்றி விரைந்து செயற்பட்டமை பலரின் பாராட்டுதலைப் பெற்றது. உதவி செய்வதற்கான வளங்கள் மட்டுப்படுத்தப்பட்டதாக இருந்தாலும் கிடைக்கக்கூடிய பொருட்களைக் கொண்டு

பகவானின் சேவையாக வடபிராந்திய சாயி நிலைய உறுப்பினர்கள் அனைவரும் செயற்பட்டனர்.

### விசேட பிரார்த்தனை நிகழ்ச்சிகள்

நாட்டில் அமைதியும், சாந்தியும் நிலவ வேண்டும் என்பதற்காக இளைஞர் பகுதி விசேட பிரார்த்தனை நிகழ்ச்சிகளை ஞாயிறு தினங்களில் வைக்க வேண்டும் எனத் தீர்மானித்தனர். 3 மணிநேர இப்பிரார்த்தனையில் 21 தடவை ஓம்காரம் (கருத்து நினைந்து), சுப்பிரபாதம், 4 பஜனைப்பாடல் (கருத்துடன்) 108 தடவை காயத்திரி ஜெபம் (கருத்து நினைந்து) யோகர் சுவாமிகள் பாடல் (கருத்துடன்) நாமஜெபம் 108 தடவை, தியானம், மங்கள ஆரத்தியுடன் நிறைவு செய்யப் பட்டது. இந்த அமைப்பில் முதலாவது சாதனை நிகழ்ச்சி மானிப்பாய் நிலையத் தில் 25.06.2000 அன்று நடைபெற்றது. தொடர்ந்து உரும்பிராய், கொக்குவில், சித்தங்கேணி, சுன்னாகம், நல்லூர், யாழ்ப்பாணம், பருத்தித்துறை, தாவடி ஆகிய நிலையங்களில் நடைபெற்றது. ஏராளமான இளைஞர்களும், சாயி நிலைய ங்களின் உறுப்பினர்களும், இடம்பெயர்ந்த மக்களும் கலந்து கொண்டனர். இந்நிகழ் ச்சிகளில் வடபிராந்திய இளைஞர் பிரிவு இணைப்பாளர் திரு. R. வசந்தசேனன், ஆத்மீக இணைப்பாளர் திரு. S. R. சரவணபவன், இளைஞர் பிரிவுத் தலைவர் Dr. S . சிவகோணேசன், செயலா ளர் திரு. V. புவனராஜ், T. கிரிதரன் ஆகியோர் கலந்துகொண்டு நெறிப்படுத்தி வருகின்றனர்.

### நாட்டில் சாந்தி சமாதானம் வேண்டி விசேட பிரார்த்தனை

இன்றைய சூழ்நிலையில் இறை வழிபாட்டைத்தவிர வேறுவழி எதுவும் உதவப்போவதில்லை. ஆகவே எவ்வளவு அதிகமாக பிரார்த்தனையில் ஈடுபடமுடி யுமோ அவ்வளவுக்கு முழுமையாக ஈடுபடும்படி வடபிராந்திய ஆன்மீக இணைப்பாளர் நிலையங்களுக்கு ஓர் சுற்றுநிருபம் அனுப்பியுள்ளார்.

இதன்படி பல நிலையங்களில் ஞாயிற்றுக்கிழமை விசேட பிரார்த்த னைகள் நடைபெற்றுவருகிறது.

### நிலையங்களில் விசேட பிரார்த்தனை நிகழ்ச்சிகள்

வட்டுக்கோட்டை நிலையத்தில் நாட்டு அமைதிக்காக ஓர் விசேட பிரார்த்தனை நிகழ்ச்சி நடைபெற்றது. ஓம்காரம், காயத்திரி சாதனையுடன் மத்திய இணைப்பாளர் திரு. S . சிவஞானம் ஐயா அவர்களின் உரையும் இடம்பெற்றது. இந்நிகழ்ச்சியில் ஆன்மீக இணைப்பாளர் திரு. S. R. சரவணபவன், இளைஞர் பிரிவு அமைப்பாளர் திரு. R. வசந்தசேனன் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

ஊரெழு பஜனை நிலையத்தின் சார்பில் ஏழாலை ஸ்ரீ முருகன் பாடசாலையில் ஓர் விசேட பிரார்த்தனை நடைபெற்றது. இப்பாடசாலையில் தங்கி யிருந்த ஏராளமான இடம் பெயர்ந்தோர் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர். ஆன்மீக இணைப்பாளர் இந்நிகழ்ச்சியில் கலந்துகொண்டு உரையாற்றினார்.

கொக்குவில் நிலையத்தில் ஒவ் வொரு ஞாயிறு அன்றும் காலை 7 மணி தொடக்கம் 8.30 வரை விசேட காயத்திரி ஜெபம் நிகழ்ச்சி நடைபெற்று வருகிறது.

சுன்னாகம் நிலையத்திலும் ஞாயிறு விசேட பிரார்த்தனைகள் நடைபெற்று வருகிறது.

யாழ்ப்பாணம் நிலையத்தில் தினசரி காயத்திரி ஜெபம் நடைபெற்று வருகிறது.

தாவடி நிலையத்திலும் தொடர்ந்து ஞாயிறு விசேட பிரார்த்தனை நடைபெற்று வருகிறது.

**குறிப்பு**: கொழும்பிலிருந்து படம் வருவதில் தாமதம் ஏற்பட்டுள்ள மையால் இந்த இதழுடன் சுவாமி யின் படம் இணைக்கப்படவில்லை.

அச்சுப்பதிப்பு: காருண்யா கணனி சேவைகள், தாவடி, கொக்குவில்

பகவானின் ஒரு வேண்டுகோள்

# இரத்த தானம் செய்யுங்கள்

## தெய்வீக அன்புப் பிரவாகத்தைப் பகிர்ந்து கொள்ளுங்கள்

01. உங்கள் உடலில் 5 – 6 லீற்றர் வரையான இரத்தம் உள்ளது

02. இரத்ததானம் செய்பவரிடமிருந்து 250 அல்லது 450 மில்லி லீற்றர் இரத்தம் மட்டுமே பெறப்படும்.

03. நீங்கள் தானமாக வழங்கும் இரத்தம் 15 — 20 நிமிடங்களில் கனவளவில் (Volume) உங்கள் உடலினால் மீள நிரலப்பட்டு 24 – 48 மணித்தியாலங்களில் இழக்கப்பட்ட கலங்களும் மீளப்பிரதியீடு செய்யப்பட்டுவிடும்.

04. இதற்காக உங்களுக்கு விசேடமான உணவு எதுவும் தேவையில்லை நீங்கள் மீண்டும் உற்சாகம் பெற சாதாரண நீராகாரமும் 20 – 30 நிமிட வரையான ஓய்வுமே தேவையானதாகும்.

05. இரத்த தானம் என்பது எந்தவிதமான உடல் பாதிப்பையும் ஏற்படுத்தாது மாறாக இது பல வழிகளிலும் எமக்கு உதவுகிறது,

06. எனவே நீங்கள் எந்த விதமான பயமுமன்றி மூன்று மாதத்திற்கு ஒருமுறை இரத்த தானம் செய்யலாம்.

07. ஒருவருக்கு உயிரளிக்கும் அந்த எல்லையில்லா தெய்வீக அன்புப் பிரவாகத்தைப் பகிர்தலினூடாக இந்த தன்னிகரில்லா இலட்சியத்தை நோக்கமாகக் கொண்ட சேவைக்கு முன்வாருங்கள்,

-பகவான் பாபாவின் புட்டபர்த்தியிலுள்ள அதி நவீன வைத்தியசாலையின் வெளியீடு-

## விவிலியம் கூறுவது

கடவுள் நமக்கு அடைக்கலமும் ஆற்றலுமாய்
உள்ளார்; இடுக்கண்ணுற்ற வேளைகளில்
நமக்கு உற்ற துணையும் அவரே.

(விவிலியம்: திருப்பாடல்கள் 46, 1)

என்றுமுள கடவுளே உனக்குப்
புகலிடம்; என்றுமுள அவரது
புயம் உனக்கு அடித்தளம்;
'பகைவரை உன் முன்னின்று
விரட்டியடித்து அவர்களை
அழித்துவிடு' என்பார் அவர்

(விவிலியம்: இணைச்சட்டம் 33, 27)